Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு +II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P No - 0777286247

(c-2203)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 25 (08.12.2004) புதன்கிழமை இதழ்:68







தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறிய சிறப்பு அணிகளுக்கான தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தேசியத் தலைவர் பயிற்சியை நிறைவு செய்த போராளி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் போரியல் நுட்பங்கள் குறித்து கருத்துரை வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# சமாதான முயற்சிகள் பலவீனம்;

# மீண்டும் போர் மூளும் ஆபத்து!

## சர்வதேச ஊடகங்கள் கருத்து

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக யோசனைகளின்...

## புலிகளின் சிறப்பு அணிகள்

y Noolaham Foundation.
org | aavanaham.org

# மீண்டும் போர் மூளும் ஆபத்து!

## சர்வதேச ஊடகங்கள் கருத்து

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாக யோசனைகளின் அடிப்படையில் உடனடியாகப் பேச்சுக்கு வருமாறு மாவீரர் தின உரையில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் விடுத்த அழைப்புக்கு - அரசாங்கம் இதுவரை பதிலளிக்காத நிலையில் மீண்டும் யுத்தம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**பொறுமையின் எல்லைக்கு வந்து விட்டதாகவும் உடனடியாக அரசு இடைக்கால நிர்வாக யோசனைகளை அடிப்படையாக வைத்து நிபந்தனையற்ற பேச்சுக்கு வருமாறு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் நாள் உரையில் அழைப்பு விடுத்திருந்தார்.**

**(12 ஆம் பக்கம் பார்க்க)**

## சென்னை ஈ.என்.டி.எல்.எவ் அலுவலகம்

## கியூ பிரிவு பொலிஸாரினால் முற்றுகை; பரந்தன் ராஜனும் கூட்டாளிகளும் கைது!

### சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்

(கொழும்பு)

ஈ.என்.டி.எல்.எவ் இன் தலைவரும், தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தராகக் கருதப்படுபவருமான பரந்தன் ராஜன் என அழைக்கப்படும் ஜி.ஞானசேகரம் உட்பட 9 பேர் இந்திய கியூபிராஞ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழ் நாட்டின் கோடம்பாக்கத்தில் உள்ள இவரது வீட்டைச் சுற்றிவளைத்த இந்திய கியூபிராஞ் பொலிஸார் இவர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுடன் இணைந்து தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி அமைப்புக்களை உருவாக்குவதில் முன்னின்ற பரந்தன் ராஜன் எனப்படும் ஞானசேகரம் தனது சகோதரரான ஞானரா ஜாவை அந்தக்கட்சிகளின் செயலாளராக நியமித்திருந்தார்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பலதரப்பட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. கருணாவின் குழுவையும் இவர்களினதும் பெயரைப்பாவித்து விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டில் ஊடுருவிவிட்டார்களென இந்திய புலனாய்வுத் துறையினர் எச்சரித்திருந்தமையை அடுத்து இவர்கள்மீது எழுந்த சந்தேகமே இவர்கள் கைதுசெய்யக் காரணமென ஒருதகவலும், மற்றைய தகவல் இவர்களுடைய பாதுகாப்புக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற ஐயமே எனவும் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இந்திய சிறப்பு முகாமில் ஒருவர் வைக்கப்பட்டால் அவரது அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்படுவதோடு இந்திய அதிகாரிகளுக்குத் தெரியாமல் எந்த நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் இவரது அமைப்பின் பொதுச் செயலாளரான மனோ மாஸ்ரர் கொழும்பில் காணாமற்போனதுடன் அவருடன் இருந்ததாகக் கருதப்பட்ட றங்கப்பா இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சிறப்பு அணிகள் பயிற்சி முடித்து வெளியேற்றம்

### நிகழ்வில் பிரபா பங்கேற்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் சிறப்புப் பயிற்சிகளை நிறைவுசெய்து வெளியேறிய சிறப்பு அணிகளுக்கான தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சிறப்புப் பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறிய அணிகளுக்கான சான்றிதழ்களையும், பரிசில்களையும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வழங்கினார்.

அத்துடன் இந்த நிகழ்வில் பயிற்சிகளை நிறைவுசெய்து வெளியேறிய சிறப்பு அணிகளுக்குப் போரியல் நுட்பங்கள் தொடர்பான ஆழமான கருத்துரைகளை தேசியத் தலைவர் வழங்கினார்.

இந்த நிகழ்வில், கட்டளைத் தளபதிகள்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றை அவமதித்த குற்றத்திற்கு எஸ்.பிக்கு 2 வருட கடூழியச்சிறை



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸநாயக்காவிற்கு நேற்று கொழும்பு உயர் நீதிமன்றம் இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஹபராதுவ தொகுதியில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய எஸ்.பி.திஸநாயக்கா நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் உரையாற்றியதாக அந்தப்பிரதேச வாக்காளர்கள் மூவரினால் குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கு ஆதாரமாக அவரது உரையடங்கிய ஒலிப்பதிவு நாடாவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.டி.சில்வா மற்றும் நீதியரசர்கள் சிராணி பண்டாரநாயக்கா, ரி.பி.வீரசூரிய, ராஜா பெர்னாண்டோ, நிமால் திஸநாயக்கா ஆகியோர் இந்த மனுவை விசாரித்தனர்.

இந்த மனு தொடர்பான தீர்ப்பை வழங்கிய பிரதம நீதியரசர், 'உயர் நீதிமன்றத்தில் ஜனாதிபதி தொடர்பான பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அமைச்சரொருவர் தெரிவித்த கருத்து நீதிமன்றத்தை அவமதிப்பது மட்டுமன்றி நீதிமன்றம்மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால் பிரதிவாதியை நீதிமன்றம் குற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

red by Noolaham Foundation.
ham.org | aavanaham.org

# சகலதுறை விளையாட்டு வீரர் விருது செல்வி தயாளினி செல்வராசாவுக்கு!

(வடமராட்சி)

விளையாட்டுத்துறையில் பெண்களுக்கான அனைத்துப் போட்டிகளிலும் பங்குபற்றி, வெற்றி பெற்று வரும் தயாளினி செல்வராசாவை, பருத்தித்துறை பிரதேச செயலகம், இன்று 'சகல துறை விளையாட்டு வீரர்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய, சர்வதேச போட்டிகளில்- வலைப்பந்தாட்டம், எல்லே, கரப்பந்தாட்டம், மென்பந்து துடுப்பாட்டம், தடகளம் போன்ற போட்டிகளில் பங்குபற்றி சிறந்த பரிசில்களை தயாளினி செல்வராசா பெற்றுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் இராஜசிங்கம் மற்றும் மாவட்டப் பயிற்சியாளர்கள் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். (20)

## பொது விரிவுரைகள் தொடரில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஏற்பாட்டில் மதக் கல்வியில் புதிய கருத்துக்கள் விரிவுரைத் தொடரில் - இன்று மாலை 3 மணிமுதல் 4.30 வரை புவியியற் துறை விரிவுரை மண்டபத்தில், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் நாச்சியார் செல்வநாயகம் குடியேற்ற நாட்டுக் காலத்திற்கு முந்திய தமிழகத்தில் தமிழர் என்ற பொருளில் உரை நிகழ்த்தவுள்ளார்.

## கல்வியியற் கல்லூரி இறுதியாண்டு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாம் வருட மாணவர்களுக்கான இறுதியாண்டு பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பித்து 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகத் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தெரிவித்தார்.

## அடிக்கல் நாட்டுவிழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கலாசார சபையினால் 50 லட்சம் ரூபா செலவில் யாழ் முற்ற வெளிப்பகுதியில் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று நடைபெறவுள்ளதென அறிவித்தபோதும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த அடிக்கல் நாட்டலுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

# கண்டெடுத்த நகையை ஒப்படைத்தவர் கௌரவிப்பு

பெறுமதிமிக்க தங்கநகையைக் கண்டெடுத்து கொடுத்தமைக்காக, கண்டெடுத்து கொடுத்தவர் - பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் இன்று கௌரவிக்கப்படவுள்ளார்.

பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகோயிலின் கடந்த சமுத்திர தீர்த்தோற்சவத்தின்போது கட்டப்பிராயைச் சேர்ந்த தனபாலசிங்கம் என்பவர் பெறுமதிமிக்க தங்கநகையினை ஆலயச் சூழலில் கண்டெடுத்து பருத்தித்துறை பிரதேச செயலக உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைத்தார்.

பின்னர் உரியவரிடம் பிரதேசச் செயலகம் கையளித்தது. இவரின் இந்தச் செயலைப் பருத்தித்துறை பிரதேச செயலகம் பாராட்டி கௌரவிக்கவுள்ளது. (20)

# கர்ப்பிணித் தாய்மாருக்கான சிறுவர் பராமரிப்பு கருத்தரங்கு

உலக உணவுத் திட்டத்தின்கீழ் கோப்பாய் பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கர்ப்பிணித் தாய்மாருக்கான விசேட கருத்தரங்கு இன்றுமுதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் ஆரம்ப சிறுவர் அபிவிருத்தியும் போசாக்கு வளர்ச்சியும், தொற்றுநோய்கள், சுற்றாடல் பாதுகாப்பு, எயிட்ஸ் தாக்கம், சத்துணவு சமயல் செய்யும்முறை தொடர்பாக தாய்மாருக்கு விசேட கருத்துரைகள் வழங்கப்பட இருப்பதால் இப்பிரதேச தாய்மார்கள் யாவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொதுசுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (90)

## இலவச பாடநூல் விநியோகம்

கோப்பாய் கல்விக்கோட்டத்தின் கீழுள்ள பாடசாலைகளுக்கு 2005 ஆம் ஆண்டுக்கான ஒரு தொகுதி இலவச பாடநூல்கள் நேற்றும், நேற்றுமுன்தினமும் வழங்கப்பட்டுள்ளன. எனினும் ஏதாவது பாடசாலைகள் இலவசப் பாடப் புத்தகங்களைப் பெறத் தவறியிருந்தால், உடன் கோட்டக் கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கோட்டக் கல்வி அதிகாரி பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (90)

## சேவைநலன் பாராட்டுவிழா

(உடுவில்)

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் டாக்டர் செல்லையாவின் சேவைநலன் பாராட்டுவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் கடந்த 45 வருடங்களாக உடுவில் மகளிர் கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் இந்த மாதம் 31 ஆம் திகதி தனது அதிபர் சேவையிலிருந்து இளைப்பாறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏழாவது பிறந்தநாள் வாழ்த்து



08-12-2004

## செல்வி சி. துசாளினி

கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த

சிறிதரன் - பாமினி தம்பதிகளின்

*செல்வப் புதல்வி சி. துசாளினி*

ஏழாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் இன்று (08/12/2004) வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா சிறிதரன், அம்மா பாமினி, தம்பிமார் – ஜனா, தவஸ், அப்பப்பா, அப்பம்மா, அத்தைமாரான சிறிவதனி, சிறிபாபுஜி, சித்தப்பாமாரான சிறிவரன், சசிகாந், மகின்றோ, பிரகலாதன், சாரங்கன் மற்றும் அமுதா அன்ரி, கலா அன்ரி, ராசாண்ணை, ஐயா, அம்மா, அண்ணை, அம்மம்மா, அம்மப்பா ஆகியோர் வராகி அம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல் - சி. சிறிவன், இ. சசிகாந்.

C/3443

# நல்லூர் பிரதேசசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2005

01.01.2005 ஆம் திகதி முதல் 31.12.2005 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குப் பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி கோரப்படுகிறது.

| சந்தைகள். இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்ணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்ததொகை (VAT தவிர்ந்தது) |
|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | |
| திருநெல்வேலிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 15000.00 | 3911430.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | |
| கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 10000.00 | 177265.00 |
| கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 173470.00 |
| கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 68250.00 |
| கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன்சந்தை | 200.00 | 500.00 | 1000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 14.12.04 ஆம் திகதி செவ்வாய் பி.ப. 2.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 15.12.04 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி : 15.12.04 ஆம் திகதி புதன் பி.ப. 3.00 மணி

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை காரியாலய நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை
திருநெல்வேலி
06.12.2004

பொன்னையா வைரமுத்து
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

(சி-3447)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
(குளிரூட்டப்பட்டது)
இளைய தளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30 (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 [பு.நே]
ஆங்கிலப்படம்
VANHELSING (நகுல படம்)

திறைஞ்சனாஸ் சங்கானை
சுரேஸ், சௌந்தர்யா நடித்த
08.12.2004 முதல்
அம்மன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
VANHELSING (நகுல படம்)
அடுத்த வெளியீடு சரத்குமார் நடித்த சத்ரபதி

ராஜா யாழ்ப்பாணம்.
5 முதல் 9 வரை
சிறுவர்களுக்கான சிறந்த ஆங்கிலச் சித்திரம்.
SPIDERMAN-2
புதிய நேரம்: 10.30. இரவு 9.30. மட்டும்
ஸ்ரீகாந், சினேகா, கலாபவன்மணி நடித்த
போஸ்
புதிய நேரம்: 2.30. 6.30. மட்டும் (ரீல்ஸ்)

நாகம்ஸ் சுன்னாகம்


அட்டகாசம் (ரீல்ஸ்)
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)

# அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## 2005 ஆம் ஆண்டுக்கான வியாபார வரி. வியாபார உரிமக் கட்டணம் தொழில் மீதான வரி செலுத்துதல்

யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட சகல வியாபார நிலையங்களும் உற்பத்தி நிறுவனங்கள், தனியார் கல்வி நிலையங்கள் வைத்திய ஆலோசனை நிலையங்கள், தனியார் வைத்திய நிலையங்கள் போன்ற உயர் தொழில் நிறுவனங்களும், வியாபார வரிகளையும் வியாபார உரிமக் கட்டணங்களையும் தொழில் மீதான வரிகளையும் எதிர்வரும் 31.03.2005 ஆம் திகதிக்கு முன் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் தொழில் மாற்றம் செய்பவர்களும், புதிய தொழில் ஆரம்பிப்பவர்களும் தொழில் நிலையங்களை மூடுபவர்களும் உடனுக்குடன் சபைக்கு அறியத்தந்து ஒத்துழைக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

தவறுபவர்கள் மீது மாநகரசபைக் கட்டளைச் சட்டம் 576 பிரிவு 512 இன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்
02.12.2004

கலாநிதி க. குணராசா
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்

(சி-3445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூல செனிவிரத்னவுக்கு கூட்டுப் படைத்தலைமையகத்தில் புதிய பதவி வழங்கப்படும்!

(கொழும்பு)

எதிர்வரும் 11 ஆம் திகதி இராணுவத்திலிருந்து ஓய்வு பெறவுள்ள இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்ன, கூட்டுநடவடிக்கைத் தலைமையகத்தில் பொறுப்பு வாய்ந்த பதவி யொன்றில் நியமிக்கப்படலாமென்று செய்திகள் தெரிவித்தன.

55 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்னவை கூட்டு நடவடிக்கை தலைமை அதிகாரிகளுக்குப் பொறுப்பான பதவி ஒன்றில் அமர்த்துவது குறித்து, கூட்டுப் படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சூல செனிவிரத்னவுக்குப் பின்னர் இராணுவத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேக நியமிக்கப் படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள படையினர் தயார் நிலையில் உள்ளனர்!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

நாட்டின் இறைமைக்கு ஏற் படக்கூடிய எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள எமது படையினர் தயாராக உள்ளனர் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்புச் செலவீனத்துக் கான நிதி ஒதுக்கீட்டு விவாதத் தின்போது உரையாற்றுகை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்-

எமது படைகளை நாம் ஆளணி யாலும், ஆயுத வளத்தாலும், உள ரீதியாகவும், உயர்ரக ஆயுதங்களா லும், உபாயங்களாலும் வலுப்படுத் திக்கொண்டுதான் இருக்கிறோம். வலுப்படுத்தத்தான் போகிறோம். இலங்கை - இறைமையுள்ள நாடு என்ற வகையில் அதைப் பாது காக்க இத்தகைய நடவடிக்கை களை எடுக்க வேண்டியது எமது பொறுப்பு.

யுத்தம் புரிவது எமது விருப் பமல்ல. ஆனால், மக்களைத் தூண்டிவிட்டு, வன்முறைகளின் ஊடாகப் புலிகள் யுத்தத்தைத் திணிக்க முற்படும்போது, அதி லிருந்து மக்களைக் காப்பாற்ற



எமது படைகளை உஷார் நிலை யில் வைத்திருக்க வேண்டியது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் எனது பொறுப்பாகும்.

புலிகள் சமர்ப்பித்த இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவை மட்டும், பேச்சு மேசை யில் பரிசீலனைக்கு எடுக்க அரசு தயாரில்லை. இறுதித் தீர்வு பற்றி யும் பேசப்படவேண்டும். இந்த நிலைப்பாட்டில் அரசு மிகத் தெளி வாக உள்ளது எனவும் அவர் தெரி வித்தார்.

# இந்திய கொள்கை வகுப்பாளர்களுக்குள் புதிதாகத் தோன்றியுள்ள முரண்நிலை!

கருணா குழுவுக்கும், ஈ.என்.டி. எல்.எவ் அமைப்புக்கும் இடையே றோ அமைப்பின் மேற்பார்வையில் உருவாக்கப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி அமைப்புத் தொடர்பாக, இந்தியாவின் பிராந் தியக் கொள்கை வகுப்பாளர்க ளுக்கும், சில இந்திய உளவுத் துறை அதிகாரிகளுக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தியாவின் உளவுத்துறை யான றோ அமைப்பின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கும் ஈ.என்.டி. எல்.எவ் உறுப்பினர்களை, விடு தலைப் புலிகளின் அமைப்பில் இருந்து, சுயநலத் தேவைகளுக் காகப் பிரிந்த உறுப்பினர்களுடன் இணைத்து, கட்சி உருவாக்கி யுள்ளமை இந்தியாவின் வெளியு றவுக் கொள்கைகளை ஆபத்தான கட்டத்துக்கு இட்டுச் செல்லுமென்று இந்தியப் பிராந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக ஈ.என்.டி. எல்.எவ் அமைப்பு உருவாக்கப் பட்டு, அதில் பாரிய தோல்வியை இந்தியப் படைகள் சந்தித்தன. இதற்குப் புத்துயிரூட்டும் செயலாக முன்னைநாள் விடுதலைப் புலி களின் உறுப்பினர்களுடன் இணைந்து புதிய கூட்டணியை உருவாக்கியுள் ளமை ஆபததை உருவாக்கலாம்.

இவர்கள் தமிழ்த்தேசிய உணர்வு டன் பல காலம் போராடியவர்கள். எனவே இவர்களின் உளவியல் செயற்பாடுகளில் இந்தியப் பிராந் தியக் கொள்கைக்கு ஏற்றவிதத்தில் முழுமையான உளவியல் மாற்றத் தையும் பயன்பாடுகளையும் எதிர் பார்க்க முடியாது என்றும், இந்திய உளவுத்துறைக்குள்ளும் அவற்றின் செயற்பாடுகளிலும் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இதன் மூலம் உருவாகலாம் என்றும் கொள்கை வகுப்பாளர்கள் அச்சம் தெரிவித் துள்ளனர்.

## சுகாதார ஊழியர்களின் மேலதிக நேர கொடுப்பனவுக்கு நிதி ஒதுக்கீடு

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

அரசாங்க மருத்துவமனைகளில் சுகாதார ஊழியர்களாகப் பணிபுரிப வர்களுக்கு வழங்க வேண்டிய மேல திக நேரக் கொடுப்பனவுகள் அடுத்த இரண்டுவார காலத்துக்குள் வழங்கு வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள தாகச் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மேலதிக வேலை நேரக் கொடுப் பனவுகளுக்காக 15 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதன்படி தேசிய வைத்தியசாலைகளுக்கு ஆறுகோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

வைத்திய சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு கள் குறித்துப் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் (நிதி) ஒப்புதலுடன் வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக் குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (தே)

## அடுத்த வருடத்தில் 200 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம்!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 200 பேருக்கு அடுத்த வருடம் வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணம் செல்வதற்கான வாய்ப் புக்களை வழங்குவதற்கு அர சாங்கக் கட்சியின் பிரதான அமைப் பாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தப் பயணத்துக்காக 20 பேர் கொண்ட குழுவாக இவர்கள் பிரிக்கப்படுவார்கள். இதில் ஒரு குழுவில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த 10 பேரும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 10 பேரும் அங்கம் வகிப்பர்.

இவ்வாறு இவர்கள் அடுத்த வருடத்துக்குள் பயணம் செய்வ தற்கு 26 நாடுகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன. அவை ஜேர்மன், பிரா ன்ஸ், நோர்வே, தென்னாபிரிக்கா, ஜப்பான், தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, அவுஸ்ரே லியா, நியூஸிலாந்து, டென்மார்க், பின்லாந்து, தாய்லாந்து, ஈரான், ஜோர்தான், சீனா, மெக்சிக்கோ, சுவிற்சர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளாகும்.

இந்தப் பயணத்தின் மூலம் அபி விருத்தி அடைந்த நாடுகளிலுள்ள அதிவேகப் பாதைகள், குப்பை களை அகற்றும் திட்டம், வீடமைப் புத் திட்டம், சுகாதாரம், கல்வி வச திகள் மற்றும் நாடாளுமன்ற நடை முறைகள் குறித்து அறிந்து கொள்வதே நோக்கமென அரசாங் கக் கட்சியின் பிரதான அமைப் பாளரும், வர்த்தக வாணிக நுகர் வோர் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டொ புள்ளே தெரிவித் தார்.

வெளிநாட்டுப் பயணத்தில் பங்கேற்கவுள்ள எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வது குறித்து எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை இணங்கச் செய்வதற்கும் பெர்னாண்டோ புள்ளே முயற்சி களை மேற்கொண்டுள்ளார். (தே)



படையிலிருந்து தப்பியோடியவர்களுக்கு, பொது மன்னிப்பு வழங் கப்பட்டு, அவர்களுக்கான விலகல் சான்றிதழ் நேற்றையதினம் அநுரா தபுரத்தில் வைத்து வழங்கப்பட்டபோது எடுத்த படம்.

## சம்பள உயர்வு குறித்து விரைவில் விசேட வர்த்தமானி அறிவித்தல்

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட் டுள்ள சம்பள அதிகரிப்பை இந்த மாதம் முதல் வழங்குவதற்கு விசேட வர்த்தமானி அறிவித்தலை இரண்டொரு தினங்களில் வெளி யிடுவதற்கு அரச பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட கருத்துத் தெரிவிக்கையில்-

இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்துக்கான விவாதம் முடி வடைவது 10 ஆம் திகதி என்ப தால், அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு சம்பள உயர்வைத் தயாரித்து இந்த மாதத்திலேயே வழங்குவதற்குக் காலம் போதுமானதல்ல.

ஆனாலும், அதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலை வெளி யிடுவதற்கு திறைசேரியுடன் கலந் துரையாடித் தீர்மானம் ஒன்றுக்கு வந்துள்ளோம்.

வரவு - செலவுத் திட்டத்தில் வாக்குறுதியளித்தபடி இந்த மாதம் முதல் சம்பளத்தை அதிகரிப்பதற் குத் திறைசேரியுடன் கலந்துரை யாடி தேவையான நடவடிக்கை எடுக் கப்படுமெனவும் அவர் தெரிவித் தார். (தே)

## அரசியல்வாதிகள், படையினர் நினைவாக மாவீரர் தினம் பிரகடனப்படுத்த கோரிக்கை

அண்மைக்காலத்தில் கொல்லப்பட்ட அரசியல்வாதிகள், பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள் ஆகியோரை நினைவுகூருமுகமாக, மாவீரர் தினம் ஒன்று பிரகடனம் செய்ய வேண்டுமென்று, ஜாதிக ஹெல உறு மய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் கேட்டுக்கொண்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்பு கொண்ட பொலிஸ் அதிகாரிகளினதும், அரசியல்வாதிகளினதும் பெயர் விபரங்களை வெளியிட வேண்டுமென்று, ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நாடாளுமன்ற விவாதத்தின்போது கோரினார்.

## ஹிந்தி திரையுலக நட்சத்திரங்களின் கலைநிகழ்ச்சிக்கு பிக்குகள் எதிர்ப்பு!

### கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி

கொழும்பில் நடைபெறவுள்ள ஹிந்தி திரையுலக நட்சத்திரங்கள் பங்குபற்றும் களியாட்ட நிகழ்ச் சியைத் தடைசெய்யவேண்டும் என்று கோரி, தேசிய பிக்குகள் சங்கம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்றுமுன்தினம் நடத்தியது.

ஹிந்தித் திரையுலகின் முன் னணி திரை நட்சத்திரங்களில் ஒரு வரான ஷாருக்கான் தலைமையில் ப்ரீத்தி ஸிந்தா, ஸபி அலிஹான், ப்ரியங்கா சோப்ரா, ஜாவிட் ஹான், ஷெரினா ஜெட்லி ஆகியோர் உட் பட நடனக் குழுவினர் பங்குபற்றும் இந்த மாபெரும் கலை நிகழ்ச்சி, கொழும்பு குதிரைப்பந்தயத் திட லில் நடைபெற ஏற்பாடாகியுள் ளது.

இந்த நிகழ்ச்சிக்கான ரிக்கெட் ஒன்றின் விலை 10 ஆயிரம் ரூபா வரை உள்ளது. நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க அயல்நாடுகளான மாலைதீவு, சிங்கப்பூர் மற்றும் பல நாடுகளிலிருந்தும்கூட ரசிகர்கள் ரிக்கெற்றுக்களை முற்பதிவு செய் துள்ளனர்.

இந்த நிலையில் பிக்குகளின் இந்த எதிர்ப்பு விழா ஏற்பாட்டாளர் களை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்புக் குறித்துத் தெரிவிக்கை யில் -

கலை நிகழ்ச்சி ஏற்பாடாகி யுள்ள அன்றைய தினம் வணக்கத் துக்குரிய கங்கொடவில சோம தேரரின் முதலாவது ஆண்டு நிறைவு தினம். அன்றைய தினம் ஏற்பாடா கியுள்ள இந்தக் கலைநிகழ்வு ஒரு சதி முயற்சியா என்றும் நாம் சந் தேகப்படுகின்றோம். இந்த விழாவை இடம்பெறவிடாது அமைதியான முறையில் நாம் எமது ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவோம் என்றும் தெரிவித்தனர்.

## அரசாங்க வைத்தியர்கள் 15 ஆம் திகதி வேலை நிறுத்தம்

(கொழும்பு)

வைத்தியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப் படாமை, வைத்தியசபை நட வடிக்கைகளை கண்காணிப்பதற் குக் குழுவொன்றை நியமிக்காமை உட்பட சில காரணங்களை முன் வைத்து, எதிர்வரும் இரு வாரங் களுக்குள் அரசாங்க வைத்திய சாலைகளில் பணியாற்றும் வைத் தியர்கள் வேலை நிறுத்தப் போராட் டத்தில் குதிப்பதற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதியன்று நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அரசாங்க வைத்தி யர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு தேசியவைத்திய சாலை உட்பட அனைத்து தேசிய வைத்தியசாலைகள், போதனா வைத்தியசாலைகள், பொது மருத் துவமனைகள் மற்றும் மாகாண அமைச்சின் கீழுள்ள வைத்திய சாலைகளில் பணியாற்றும் வைத் தியர்கள் உட்பட அனைத்து வைத் தியர்களுக்கும் 2004 ஜனவரி மாதம் முதல் இதுவரை மேலதிக நேரத்துக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் துணைச் செயலாளர் டொக்டர் உதித சென ரத் தெரிவித்தார்.

இதேவேளை - வைத்தியசாலை யின் நடவடிக்கைகளை கண் காணிப்பதற்கு குழுவொன்றை நிய மிக்கப் போவதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்து இரண்டு மாத ங்கள் கடந்தும், அது குறித்து எந்த வித நடவடிக்கையும் மேற்கொள் ளப்படவில்லை எனவும் அவர் தெரி வித்தார். (தே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவுஸ்ரேலிய கிரிக்கெட் தலைவர் அணியுடனான

# ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி

அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் அணியுடன் நடந்த ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இன்ஸமாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி, அவுஸ்ரேலிய அணியுடன் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவுஸ்ரேலிய உள்ளூர் அணியுடனான 3 நாள் போட்டியில் தோல்வியுற்ற பாகிஸ்தான் அணி நேற்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் அணியுடன் இடம்பெற்ற ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சல்மான் பட்டின் அபார துடுப்பாட்டத்தின் உதவியுடன் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாட தீர்மானித்த பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சல்மான் பட் மற்றும் இம்ரான் பர்ஹத் ஆகியோர் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் அணியின் பந்து வீச்சாளர்களை ஆரம்பத்தில் நிலை குலையச் செய்தனர். இவர்கள் இருவரும் முதல் இரு ஓவர்களில் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

பாகிஸ்தான் அணி 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் இம்ரான் பர்ஹத் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் ஒரு பவுண்டரி மற்றும் சிக்ஸர் உள்ளடங்கலாக இந்த ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து வந்த இன்ஸமாம் 16 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். ஏனைய வீரர்கள் எவரும் சோபிக்காத நிலையில் சல்மான் பட் ஆட்டமிழக்காது 115 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். இவர் 135 பந்துகளில் 11 பவுண்டரி மற்றும் ஒரு சிக்ஸர் உட்பட 115 ஓட்டங்களைப் பெற்றார்.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 256 ஓட்டங்களைப் பெற்றது.

257 ஓட்டங்களப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் அணியின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை.


அவுஸ்ரேலிய அணியின் டெஸ்ட் போட்டிகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜஸ்ரின் லாங்கர் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.



அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் அணியின் ஏனைய வீரர்கள் எவரும் சோபிக்காத நிலையில் அவ்வணியின் முன் வரிசைத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் றோகேஸ் 61 ஓட்டங்களை அதிகூடிய ஓட்டங்களாக பெற்றார்.

இறுதியில் 46 ஓவர்களில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்று 43 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

## நியூஸிலாந்துடனான 2 ஆவது போட்டி; அவுஸ்ரேலிய அணியில் மெக்ரா!



நியூஸிலாந்து - அவுஸ்ரேலிய அணிகள் மோதும் ஒருநாள் தொடரில் இரண்டாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணியில் மெக்ரா சேர்க்கப்பட்டுள்ளார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவுடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் மோதுகிறது. நடந்துமுடிந்த முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து எதிர்பாராத வகையில் வெற்றிபெற்றது.

3 ஆண்டுகளுக்குப் பின் அவுஸ்ரேலிய மண்ணில் கிடைத்த இந்த வெற்றி நியூஸிலாந்தின் நம்பிக்கையை அதிகரித்துள்ளது. இந்த இரு அணிகளும் மோதும் 2 ஆவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் வேகப்பந்து வீச்சாளர் மெக்ரா சேர்க்கப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக கஸ்பரோவிச் நீக்கப்பட்டுள்ளார். முதல் போட்டியில் இவரது மோசமான பந்துவீச்சும் நியூஸிலாந்தின் வெற்றிக்கு ஒரு காரணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிறேசில் உதைபந்தாட்டவீரர் மாரடைப்பாலேயே உயிரிழப்பு



கோவா அணியின் பிரேசில் உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ஜூனியர் மாரடைப்பால் இறந்துள்ளார் என்று பெங்களூர் பொலிஸ் ஆணையாளர் எஸ்.மரிசுவாமி கூறினார்.

பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியின் போது கிறிஸ்டியானோ மீது மோகன் பகான் கோல்கீப்பர் மோதியதில் மைதானத்திலேயே விழுந்து இறந்தார்.

இதையடுத்து கர்நாடக மாநில உதைபந்தாட்ட சங்கத்தின் மீது டெம்போ அணியினர் புகார் கொடுத்தனர். இந்த நிலையில் செய்தி நிறுவனத்துக்கு மரிசுவாமி கருத்துத் தெரிவிக்கையில் -

கிறிஸ்டியானோவின் உடல் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. பிரேதப் பரிசோதனை அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. அறிக்கைப்படி - கிறிஸ்டியானோ மாரடைப்பு ஏற்பட்டவுடன் இறந்துள்ளார்.

கோல் போட்ட பின்னர் மோகன் பகான் அணியின் கோல்கீப்பர் மோதியதால்தான் அவர் இறந்திருக்கலாம் என்று கூறப்பட்டது. அவ்வாறு கூற ஏதும் தடயம் இல்லை என்றார் அவர்.

# விளையாட்டு

# இந்திய கிரிக்கெட் அணிக்கான கொலை மிரட்டல் வதந்தியாம்!

## பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

பங்களாதேஷில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தொலைநகலில் ஒரு கடிதம் வந்தது. அதில் 'இந்திய கிரிக்கெட் வீரர்கள், பங்களாதேஷுக்கு வரக்கூடாது. இங்கு வந்து கிரிக்கெட் விளையாடினால் அவர்களின் உயிருக்கு குறி வைப்போம்' என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கொலை மிரட்டல் கடிதம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்திய கிரிக்கெட் வீரர்களை டாக்காவுக்கு அனுப்பக்கூடாது என்று அரசியல் கட்சிகள் கூறின.

இந்த நிலையில் பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் லுடோஜ் பாபர் - டாக்காவில் நிருபர்களுக்கு பேட்டி கொடுத்தார். அவர் கூறியதாவது -

இந்தியத் தூதரகத்துக்கு வந்த கொலைமிரட்டல் கடிதம் குறித்து கடந்த 3 நாட்களாக தீவிர புலன் விசாரணை நடத்தப்பட்டது. அப்போது இந்தக் கொலை மிரட்டல் கடிதம் வெறும் புரளி, என்பது தெரியவந்தது.

ஹர்கத்-உல்-ஜிகாடி என்ற பெயரில் உள்ள தீவிரவாத இயக்கம் எழுதிய மிரட்டல் கடிதம் கடந்த வியாழக்கிழமையே இந்தியத் தூதர் அலுவலகத்துக்கு வந்திருக்கிறது. ஆனால் இது பற்றி கடந்த ஞாயிற்றுக்கிழமைதான் வெளியே கூறப்பட்டது. பொலிஸ் புலன் விசாரணையில் இது வெறும் புரளி என்பது தெரியவந்தது.

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு அதிக அளவு முழுப் பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

## மும்பை ஆடுகளம் குறித்து ஐ.சி.சியிடம் அவுஸ்ரேலியா புகார்

மும்பை ஆடுகளம் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐ.சி.சி) அவுஸ்ரேலிய கிரிக்கெட் நிர்வாகம் அதிகாரபூர்வமாக புகார் செய்துள்ளது. இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் சமீபத்தில் நடந்த டெஸ்ட தொடரின் கடைசிப் போட்டி, மும்பை, வான்கடே மைதானத்தில் நடந்தது. சுழற்பந்து வீச்சுக்கு இந்த ஆடுகளம் சாதகமாக அமைக்கப்பட்டது.

மூன்று நாட்களுக்குள் ஒட்டு மொத்த ஆட்டமும் முடிந்து, இந்தியா வென்றது. ஆனாலும், தொடரை 2-1 முன்னிலையில் அவுஸ்ரேலியா கைப்பற்றியது. மும்பை ஆடுகளம் சர்வதேசத் தரத்துக்கு இணையாக இல்லை என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் நிர்வாகம் ஐ.சி.சியிடம் இப்போது அதிகாரபூர்வமாக முறையிட்டுள்ளது.

இது பற்றி 'கிரிக்கெட் அவுஸ்ரேலியா' அமைப்பின் தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சதர்லாண்ட் கூறுகையில் -

'ஒவ்வொரு நாட்டிலும் ஆடுகளம் ஒவ்வொரு மாதிரி இருக்கும். அதை நாங்கள் எதிர்க்கவில்லை. அதேசமயம், மும்பை மாதிரி திட்டமிட்டே ஆடுகளம் அமைப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். மூன்று நாட்களுக்குள் 40 விக்கெட் விழுகிறது என்றால், ஆடுகளத்தின் தன்மையைப் புரிந்துகொள்ளமுடியும்.

எதிர்காலத்தில் இப்படி ஆடுகளங்கள் அமைப்பதைத் தடுக்கும் நோக்கில்தான் புகார் செய்திருக்கிறோம். பெப்ரவரி மாதம் நடக்கும் ஐ.சி.சி. தலைமை நிர்வாகிகள் கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை எழுப்பப்படும்' என்றார்.

# இந்திய கிரிக்கெட் அணி தன்னை பயன்படுத்திக் கொள்ளவில்லையாம்

## கவலை தெரிவிக்கிறார் சந்தீப் பட்டேல்



(புதுடெல்கி)

ஓமான் கிரிக்கெட் அணிக்கு பயிற்சியளிக்கும் பொறுப்பை இந்தியாவின் முன்னாள் நட்சத்திர ஆட்டக்காரரும், இந்திய 'ஏ' அணி பயிற்றுவிப்பாளருமான சந்தீப் பட்டேல் ஏற்றுக்கொண்டார்.

ஐ.சி.சி சுழற்கோப்பை போட்டி நடைபெறவுள்ள நிலையில் அந்தப் போட்டிக்காக ஓமான் அணிக்கு பயிற்சி அளிக்கும்படி அந்த நாட்டு கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்திருந்தது. அதை சந்தீப் பட்டேல் ஏற்றுக்கொண்டார்.

2007 ஆம் ஆண்டில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. அதற்கு தகுதிபெறும் போட்டியாக அயர்லாந்தில் ஐ.சி.சி கிண்ணம் எதிர்வரும் ஜூலையில் நடைபெறவுள்ளது.

இந்திய 'ஏ' அணி பயிற்சியாளராக உள்ள தன்னை இந்திய அணி பயன்படுத்திக்கொள்ளாதது குறித்து சந்தீப் பட்டேல் வருத்தம் தெரிவித்தார்.

முன்னோக்கி பார்க்கும் நிலையில் இந்திய அணி இல்லாதது துரதிர்ஷ்டவசமானது என்று அவர் கூறினார்.

எனக்கு நேரம் ஒதுக்கினால் நான் இந்திய அணிக்குப் பயிற்சி தர தயாராக இருக்கிறேன். இதற்காக கால வரம்பற்ற நிலையில் நான் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது. எனக்கும் குடும்ப பொறுப்புக்கள் உள்ளன.

ஜூலையில் நடைபெறவிருக்கும் ஐ.சி.சி கிண்ண போட்டிக்கு முன்னதாக ஓமான் அணிக்கு நான் நான்கு முறை அங்கு சென்று பயிற்சியளிப்பேன்.

நான் தற்போது கென்யாவில் தங்கியிருந்து அந்த நாட்டு அணிக்குப் பயிற்சி தருகிறேன்.

இந்திய அணிக்கும் என்னால் பயிற்சி தர முடியும் என்று சந்தீப் பட்டேல் கூறினார்.

### இந்திய கிரிக்கெட் அணி இன்று பங்களாதேஷுக்கு பயணம்

(புதுடெல்கி)

இஸ்லாமிய தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள போதும், இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷுக்கான சுற்றுப்பயணத்தை திட்டமிட்டபடி மேற்கொள்ளும் என இந்திய வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் செல்லவுள்ள இந்திய அணிக்கு வழங்கப்படவுள்ள உயர் பாதுகாப்பு தொடர்பாக ஆராய்வதற்கென பங்களாதேஷ் சென்றுள்ள 5 உயரதிகாரிகள் அடங்கிய குழு பங்களாதேஷ் தலைநகர் டாக்கா மற்றும் போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதையடுத்து கங்குலி தலைமையிலான இந்திய அணி இன்று பங்களாதேஷ் செல்கிறது.

# ஹொக்கி சம்பியன்ஸ் டிரொபி இந்தியாவிற்கு முதல் வெற்றி

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் டிரொபி ஹொக்கி போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் இந்தியா 3:1 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தியது.

ஆறு நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் டிரொபி ஹொக்கி தொடர் பாகிஸ்தானின் லாகூர் நகரில் நடைபெற்று வருகிறது. முதல் போட்டியில் இந்திய அணி ஸ்பெயினிடம் படுதோல்வி அடைந்தது.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இரண்டாவது லீக் போட்டியில் தற்போதைய உலக சம்பியனான ஹொலன்டுடன் விளையாடியும் இந்திய அணி தோல்வியைத் தழுவியது.

இதன் பின்னர் நேற்று நடந்த ஜேர்மனியுடனான போட்டி முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்திய அணிக்கு அமைந்த நிலையிலேயே அவ்வணி இந்த வெற்றியைப் பெற்றுள்ளது.

மற்றொரு ஆட்டத்தில் ஹொலன்ட் 4:1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானையும், ஸ்பெயின் 3:1 என்ற கணக்கில் நியூஸிலாந்தையும் வீழ்த்தி வெற்றிபெற்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

16. வரிகளை கொண்டிருப்பவை
i) A,B ii) B,C iii)A,C iv) A மட்டும்

17. மனித கருப்பையில் அதிகம் காணப்படுவது
i) A ii) B iii)C iv) B,C

18. பின்வருவனவற்றில் மூவணு வாயு எது?
i) கிலியம் ii) ஐதரசன்
iii) ஒட்சிசன் iv) காபனீரொட்சைட்டு

19,20,21,22 ஆம் வினாக்கள் பின்வரும் சமன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவை
$xN_2 + yH_2 \rightarrow zNH_3$


19. மேற்குறித்த சமன்பாட்டில் X,Y,Z இற்கு இருக்கும் பெறுமானங்கள் முறையே
i) 1,2,3 ii) 2,3,1 iii) 1,2,3 iv) 3,2,1

20 மேலே $NH_3$ இல் N,H இன் வலுவளவுகள் முறையே
i) 1,3 ii) 3,1 iii) 2,3 iv) 3,2

21. $NH_3$ யிலுள்ள பிணைப்பு எத்தகையது
i) அயன் பிணைப்பு ii) பங்கிட்டு வலுப் பிணைப்பு
iii) ஈதற் பங்கிட்டு வலுப் பிணைப்பு iv) மேற்கூறிய யாவும் சரி

22. $NH_3$ யிலுள்ள N இன் சதவீதம் (N=14, H=1)
i) $\frac{14}{17} \times 100$ ii) $\frac{17}{14} \times 100$
iii) $\frac{17}{34} \times 100$ iv) $\frac{28}{17} \times 100$

23. நேராக ஏற்றப்பட்ட பொன்னிலை மின்காட்டிக்கு அருகில் பின்வருமாறு ஏற்றமுடைய பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன. பொன்னிலை விரிவு பற்றிய சரியான கூற்று (θ என்பது பொன்னிலை இடைக்கோணம்)



i) $\theta_1 < \theta_2 < \theta_3$ ii) $\theta_1 = \theta_2 = \theta_3$
iii) $\theta_1 = \theta_2, < \theta_3$ iv) $\theta_1 > \theta_2 > \theta_3$


24. $^{27}_{13}X$ எனும் மூலகம் பற்றிய சரியான கூற்று
a) அணு எண் - 27
b) திணிவெண் - 13
c) புரோத்திரன் - 27
d) நியூத்திரன் - 14
i)a,d ii) b,c iii) c மட்டும் iv) d மட்டும்

25. ஒரு மனிதனின் நிறை 550N அவனது பாதமொன்றின் பரப்பு $0.0125m^2$ எனின் அவன் பாதம் மூலம் தரையில் பிரயோகிக்கும் அமுக்கம் யாது?
i. $\frac{550}{0.0125}$ $Nm^{-2}$ ii. $\frac{550}{0.0125 \times 2}$ $Nm^{-2}$
iii. $\frac{0.0125}{550}$ $Nm^{-2}$ iv. $\frac{550}{0.0125} \times 2$ $Nm^{-2}$

26. கூட்டுநுணுக்குக் காட்டி ஒன்றின் கண் வில்லை x 10, பொருள் வில்லை x 50 பொருளின் உருப்பெருக்கம் யாது?
i) 50 மடங்கு ii) 500 மடங்கு
iii) 5 மடங்கு iv) 250 மடங்கு


27. X எனும் உலோகம் வளியில் வெப்பமேற்றும் போது பிரகாசமான பொன் மஞ்சள் நிறசுவாலையுடன் எரிந்து X ஆக இருக்கக் கூடியது எது?
i) Na ii) K iii) Mg iv) Ca

28. இலத்திரனியற் சுற்றுக்களில் பயன்படும் நான்கு துணைச் சாதனங்கள் கீழேயுள்ளன. இவை முறையே சரியாக இனங் காணப்பட்டிருக்கும் விடை யாது?





i) தடை, இருவாயி, ஒளிகாலும் இருவாயி, கொள்ளளவி
ii) இருவாயி, தடை, கொள்ளளவி, ஒளிகாலும் இருவாயி.
iii) தடை, இருவாயி, கொள்ளளவி, ஒளிகாலும் இருவாயி.
iv) தடை, இருவாயி, திரான்சிஸ்ரர், ஒளிகாலும் இருவாயி

29. 2400Kgm-3 அடர்த்தியும் $2x10^{-2}m^{-3}$ கனவளவுடைய துமான ஓர் மரக்குற்றி அதன் மொத்த கனவளவின் முக்காற்பங்கு $1200Kgm^{-3}$ அடர்த்தியுடைய கடல்நீருள் கீழுள்ள




படத்திலுள்ளவாறு உள்ளதெனின் விற்றராசின் வாசிப்பைக் காண்க.
i) 480N ii) 180N iii) 300N iv) 660N

30. அருகிலுள்ள நெருக்கற் தராசு, விற்றராசு ஆகியவற்றின் வாசிப்புக்களைத் தெளிவாக அவதானித்து நிலை II இல் விற்றராசின் வாசிப்பைக் காண்க.




i. 216 n ii. 176n
iii. 52n iv. 44n

**சி.சிவதாசன்**
**OD வள நிலையம் கோப்பாய்**







# மாணவர் மலர்

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) பரீட்சை -2004

பா.குகதாசன்
கணித ஆசிரியர் OD வள நிலையம்
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

# கணிதம்

## பகுதி I

1. 1 kg தேயிலையின் விலை 240.00 ஆகும் 150g தேயிலையின் விலை யாது?

2. (-4) - (-5)

3. 0.7+ 0.064 - 0.0023

4. x/3 - 2 = 0

5. $(-4)^2$ பெறுமானம் யாது?

6. $91^2 - 4^2$ காரணி அறிவுகொண்டு விடையைக் காண்க?

7. $73^0$ இன் மிகைநிரப்பி கோணம் யாது?

8. 0.00573 என்பதை விஞ்ஞான முறைகுறியீட்டில் தருக.

9. 0.25; 1/2, 3/4 என்பதை இறங்கு வரிசைப்படுத்துக?

10. $3\sqrt{2} + \sqrt{2}$


11. (X x 2) (x-7) = 0 என்ற இருபடிச் சமன்பாட்டை தீர்க்க

12. S=ut + 1/2 $at^2$ என்ற சமன்பாட்டில் U ஐ எழுவாயாக மாற்றுக.

13. a = -2 b = 3 எனின், $a^3 - a^2 b$ இன் பெறுமானங்களைக் காண்க.

14. சுருக்குக [2 5/6 - 1/2] 3 1/2

15. உருவில் x,y இன் பெறுமானங்களைக் காண்க.




16. 4 மனிதர்கள் 14 நாட்களில் செய்யும் வேலையை 7 மனிதர்கள் செய்ய எத்தனை நாட்கள் எடுக்கும்.

17. 14m ஆரையுடைய சில்லொன்று 880 m தூரம் செல்வதற்கு எத்தனைமுறை சுழலவேண்டும்?

18. 231 நான்கு என்ற எண்ணை
i. அடி பத்தில் தருக?
ii. துவித எண்ணாக மாற்றுக.


19. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.
63 x 7 + 3 x 63

20. AB, BC எனும் சமாந்தரமற்ற கோடுகளில் இருந்து சம தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை பருமட்டான படம் மூலம் காட்டுக.

21. $\frac{3}{x-5} - \frac{2}{x-2}$

22. கம்பனி ஒன்றின் ரூ.10 பங்குகளை 15 படிவாங்குவதற்கு ஒருவர் 7500 முதலீடு செய்கிறார். கம்பனி வழங்கிய பங்கு லாபம் 8% ஆகும்.
i.வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?
ii.மொத்தப் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?
iii.வருமானம் எவ்வளவு?


23. தரப்பட்ட வென்னுருவைப் பயன்படுத்தி





i. A இன் மூலகங்களை எழுதுக?
ii. n(AuB)
iii. B′nA நிழற்றிக் காட்டுக?

24. Sin A = $\frac{5}{\sqrt{41}}$ எனின் COSA இன் பெறுமானம் யாது?

25. i. உருவில் x,y இடையிலான தொடர்பு யாது?
ii. x,y பெறுமானம் யாது?




26. தரப்பட்ட உருவில்
i. AD இற்குச் சமமான விகிதமொன்றைப் பக்கங்கள் தொடர்பாக தருக?
ii. x இன் பெறுமானத்தை காண்க.





27. x ≥2, Y≤ -4 எனும் சமனிலிகளை ஆள்கூற்றுத் தளத்தில் வரைபுபடுத்துக?

28. 200 m/s என்னும் வேகத்துடன் செல்லும் வாகனம் ஒன்று 2 நிமிடத்தில் சென்ற தூரத்தை Km இல் தருக?

29. 2y = 3x- 5 எனும் நேர்கோட்டின் படித்திறன் வெட்டுத்துண்டு யாது?

30.




கடை ஒன்றில் கூடுதலாக விற்பனை செய்யப்பட்ட துணியின் நிறங்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளது. வெள்ளை நிறத்துணி 450m விற்பனையானது எனின், விற்பனையாகிய மஞ்சள் நிறத் துணியின் அளவு யாது?

## பகுதி II

01. Y= 5-$2x^2$ என்ற சார்பின் வரைபை x இல பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| X | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| Y | -13 | ... | ... | ... | 3 | -3 | -13 |

a) அட்டவணையின் வெற்றிடங்களை நிரப்புக?
X அச்சு வழியே 10 சிறு பிரிவுகளை 1 அலகாகவும், அச்சு வழியே 10 சிறு பிரிவுகளை 2 அலகாகவும் எடுத்து சார்பின் வரைபை வரைக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

b) உமது வரைபில் இருந்து
i சார்பின் உயர்வுப் பெறுமானம் யாது?
ii. சமச்சீர் கோட்டின் சமன்பாடு யாது?
iii. சார்புநேராக இருக்கும் X இன் பெறுமான வீச்சு யாது?
iv. $2x^2$ x X - 6 = 0 என்ற சமன்பாட்டின் மூலங்களை காண்க?

02. நேர்விளிம்பு, கவராயம் cm/mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி
i. AB = 6 cm    $B\hat{A}D = 90$,    AD = 4.8cm
BC = 7cm,    DC = 6.5 cm ஆகவுள்ள நாற்பக்கல் ABCD ஐ அமைக்க?

ii. மூலைவிட்டம் BD யின் நீளத்தை அளந்து எழுதுக?
III) A,D எனும் புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் இருக்கின்ற புள்ளியின் ஒழுக்கை அமைக்க?
iv. A,B,D எனும் புள்ளிகளினூடாகச் செல்லும் வட்டத்தை அமைக்க? அதன் ஆரையை அளந்து எழுதுக?

03. ரூ. 90000 பெறுமதி உடைய மின்சார உபகரணம் ஒன்றை வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கும்போது, முதலில் உடன பணத்தின் 1/5 ஐச் செலுத்தி மீதியை ஒவ்வொன்றும் ரூ. 4250 கொண்ட 24 சமனான மாதாந்தத் தவணைக் கட்டணங்களாக செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
i. செலுத்த வேண்டிய முற்பணம் எவ்வளவு?
ii. எஞ்சிய தொகை எவ்வளவு?
iii. செலுத்த வேண்டிய மொத்த வட்டி எவ்வளவு?
iv. மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
v. ஆண்டு வட்டிவீதம் எவ்வளவு?

04. a) ஒரு தொடரின் n ஆவது உறுப்பு Tn = 19 -3n
i. இது எவ்வகை தொடர்? காரணம் தந்து கூறுக?
ii. - 131 இத் தொடரின் எத்தனையாவது உறுப்பு?
iii. தொடரின் முதல் மூன்று உறுப்புக்களை எழுதுக?
iv. இந்தத் தொடரின் முதல் 22 உறுப்புக்களின் கூட்டுத்தொகை எவ்வளவு?
b) பெருக்கல் விருத்தி ஒன்றின் 4 ஆம் உறுப்பு 16, 7 ஆம் உறுப்பு 128 ஆகும்.
i. முதல் உறுப்பையும், பொது விகிதத்தையும் காண்க?
ii. முதல் 8 உறுப்புக்களின் கூட்டுத்தொகை எவ்வளவு?


05. நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு தோற்றியவர்களில் வழங்கப்பட்ட புள்ளி பற்றிய விபரம் பின்வருமாறு.

| வகுப்பாயிடை | 11-20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | 61-70 | 71-80 | 81-90 | 91-100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீடிறன் | 3 | 6 | 22 | 54 | 49 | 31 | 18 | 11 | 6 |

i. ஆகார வகுப்பு யாது?
ii. இடைய வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு உண்மை இடையைக் காண்க?

b) ஆசிரியர் நியமனம் வழங்கும் பொருட்டு தர்சியும், தீபாவும் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். தர்சி பரீட்சையில் சித்தியடைவதற்கான நிகழ்தகவு 2/3 உம் தீபா பரீட்சையில் சித்தியடைவதற்கான நிகழ்தகவு 4/5 உம் ஆகும்.
i. மரவரிப்படம் வரைக?
ii. இருவரும் சித்தியடைவதற்கான நிகழ்தகவு யாது?

06. தரப்பட்ட உருவில் O வட்டத்தின் மையமாகும்.
i. வட்டத்தின் ஆரை 5cm எனின் AB யின் நீளம் யாது?
ii. BC - 6cm எனின் AC யின் நீளம் யாது?
iii. $A\hat{C}B$ இன் பருமன் யாது?
iv. $A\hat{O}D$ இன் பருமன் யாது?
v. BAD இன் பருமன் யாது?




07. a) புள்ளி A,B என்பன கடலில் 1300 m இடைத்தூரத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கும் இரு கப்பலின் தளங்களைக் குறிக்கின்றன.


$C^0$

$A^0$    $B^0$

A,B என்பவற்றைக் கொண்ட அதே நிலைக்குத்து தளத்திலே ஒரு பாதை வழியாகப் பறந்து கொண்டிருக்கும் ஹெலிகொப்டர் C இலுள்ள போது அதிலுள்ள ஒருவர் A,B ஆகியவற்றின் இறக்க கோணங்கள் முறையே 350°, 550° ஆக இருப்பதை அவதானிக்கின்றார்.
i. இந்தத் தரவுகளை வரிப்படமொன்றில் காட்டுக.
ii. ஹெலிகொப்ரரானது C இலுள்ளபோது பறந்து கொண்டிருந்த உயரத்தைக் காண்க?
iii. ஹெலிகொப்ரரானது B இற்கு நிலைக்குத்தாக 1700 m உயரத்தில் இருக்குபோது A யில் இருந்து பார்க்கும் ஒருவருக்கு ஹெலியானது என்ன ஏற்றக் கோணத்தில் தென்படும்.
b) துறைமுகம் A யில் இருந்து ஒரு கப்பல் 195° திசைகோளில் 18 Km தூரம் சென்று B எனும் இடத்தை அடைந்து பின்னர் B யில் இருந்து 27° திசைகோளில் 12 Km தூரம் சென்று துறைமுகம் C ஐ அடைந்து 1 cm இனால் 3m வகை குறிக்கும் அளவிடைக்கு அளவிடைப்படம் வரைந்து A இற்கும் B யிற்கும் இடையே உள்ள தூரத்தைக் காண்க?

08. ஒருவர் கம்பனி ஒன்றின் ரூ.10 பங்குகளை ரூ.11 வீதம் வாங்க ரூ.3300 ஐ முதலீடு செய்கின்றார். கம்பனி 12% பங்கிலாபம் வழங்கியது. வருமானத்தைப் பெற்ற பின் அவர் பங்குகளை ரூ.12 வீதம் விற்றுப் பெற்ற பணத்தையும் 8% பங்குலாபம் கொடுக்கும் கம்பனி ஒன்றில் ரூ.5 பங்குகளை 6 வீதம் முதலீடு செய்கிறார்.
i. முதல் கம்பனியில் கிடைத்த வருமானம் யாது?
ii. இரண்டாம் கம்பனியின் முதலீடு யாது?
iii. 8% பங்குகளிலிருந்து கிடைக்கும் வருமானம் யாது?

b) தரப்பட்ட உருவில்




i. x இன் பெறுமானம் யாது?
ii. y இன் பெறுமானம் யாது?
iii. BCDE இணைகரமாகுமா? காரணம் தருக?
iv. BC = 10 cm உம் BC க்கும் DE இற்கும் இடையிலான செங்குத்து தூரம் 6 cm எனின், இணைகரம் BCDE இன் பரப்பளவு யாது?

இங்கே மடிக்கவும்



# விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

## பகுதி I

சரியான விடையினைத் தெரிவு செய்து உமது விடைத்தாளில் புள்ளடியிடுக.

01. விசையின் சர்வதேச அலகு பின்வருவனவற்றுள் எது?
i) N    ii) Nm    iii) $Nm^{-1}$    iv) $Kgms^{-1}$


02. (Cell Maneger) கலமுகாமையாளர் வலுவீடு (Power house) எனக் குறிப்பிடப்படும் கலப்புன்னங்கள் முறையே
i) கரு, புன் வெற்றிடம் ii) இழைமணி, கலமென்சவ்வு
iii) கரு. இழைமணி    iv) இழைமணி, கரு

03. ஐதரோக் காபன் எனும் வரையறைக்குள் அடங்காத செயற்கைப் பிரதிபீட்டுப் பல்பகுதியம்.
i) பொலித்தீன்    ii) பொலிப்புறப்பலீன்
iii) பொலிவைனல் குளோரைட்டு iv) பொலிஸ்ரைரீன்

04. மீடிறன் மட்டிசைத்தல் (FM) றேடியோ ஊடுகடத்தலில் பயன்படுத்தப்படும் மின் காந்த அலை சரியானவீச்சு எது?
i) 88Hz - 108 Hz    ii) 88 KHz- 108KHz
iii) 88Mhz - 108 Mhz    iv) 80Hz - 108Hz

05. He அணு ஒன்றின் திணிவு காபன் அணு ஒன்றின் திணிவின் 1/3 மடங்கு எனின் He இன் சாரணுத் திணிவு யாது?
i) 2    ii) 4    iii) 24    iv) 36

06. அருகிலுள்ள மின்சுற்றில் மின்குமிழ்கள் யாவும் சமதடையுடையன. இந்த மின்சுற்றில் ஆளியை மூடும்போது மிகவும் பிரகாசமாகவும், பிரகாசம் குறைவாகவும் ஒளிரும் மின்குமிழ்கள் முறையே
i) A யும், Bயும்    ii) A யும், C யும்
iii) D யும், A யும்    iv) C யும், D யும்





07. வளியிலிருந்து நீரினுள் செல்லும் ஒளிக்கதிர் ஒன்றில் மாற்றமடையாதது எது?
i) வேகம்    ii) அலைநீளம்
iii) அதிர்வெண்    iv) மேற்குறிய யாவும் சரி

08. M எனும் மூலக காபனேற்றின் சூத்திரம் $MCO_3$ ஆகும் எனின் M இனது இருகானேற்றின் சூத்திரம் எது?
i) $MHCO_3$    ii) $MCO_3$
iii) $M_2HCO_3$    iv) $M(HCO_3)2$


09. சிலந்தி மனிதன் (Spider man) திரைப்படத்தில் தோன்றும் மனிதனுக்கு சிலந்தியின் சில இயல்புகள் தோன்றியதாகக் காட்டப்படுகிறது. இதற்கான தகுந்த காரணம்.
i) விகாரம்    ii) தலைமுறையுரிமை
iii) பாரம்பரியம்    iv) கூர்ப்பு

10. பின்வருவனவற்றுள் காவிக்கணியம், எண்ணிக்கணியம் என்பவற்றை முறையே கொண்டவை
i) நேரம், விசை    ii) இடப்பெயர்ச்சி, விசை
iii) விசை, ஆர்முடுகல்    iv) ஆர்முடுகல், திணிவு

11) பின்வரும் அலை வடிவங்களில் சுரதி கூடியது.
i)    ii)    iii)    iv)



12. தரப்பட்ட அலை 10 செக்கனில் 1000 முடிகளையும் 1000 தாழிகளையும் உருவாக்கியது எனின் அவ்வலையின் வேகம் யாது?




i) $4ms^{-1}$    ii) $1ms^{-1}$    iii) $40ms^{-1}$    iv) $10ms^{-1}$


13. தரப்பட்ட அட்டவணையில் எவை சமபாரங்களாக அமையக் கூடியன (இவை நியமகுறியீடுகள் அல்ல)

| மூலகம் | இலத்திரன் | நியுத்திரன் |
|---|---|---|
| A | 7 | 7 |
| B | 18 | 22 |
| C | 6 | 6 |
| D | 20 | 20 |

i) A,B    ii) B,C    iii) C,D    iv) B,D

14. பின்வருவனவற்றுள் தூய காபனீரொட்சைட் வாயு தயாரிக்க பயன்படக்கூடியது (வெப்பமேற்றுவதன் மூலம்)
i) $CaCo_3$    ii) $AgCO_3$
iii) $K_2CO_3$    iv) $HgCo_3$

15. அருகில் காட்டப்பட்ட அமைப்பில் ஒரே அடர்த்தியுடைய திரவமானது எடுக்கப்பட்டு ஓய்வாக வைக்கப்பட்டது A,B,C,D ஆகிய புள்ளிகளிலுள்ள அமுக்கங்கள் முறையே PA,PB,PC,PD எனின் பின்வருவனவற்றுள் சரியானது




i) PA< PBC<PC <PD    ii) PA>PQ > PC>PD
iii) PA=PB=PC=PD    iv) PA>PB>PC=PD

16 ஆம் 17 ஆம் வினாக்கள் பின்வரும் தசைகளை அடிப்படையாகக் கொண்டவை
A- வன் கூட்டுத்தசை
B- மழமழப்பான தசை
C- இதயதசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வினாடிவினா போட்டி

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, யாழ். பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து நடமாடும் சேவைமூலம் கிராமம்தோறும் வினாடிவினாப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டி உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும், மீளக்குடியமர்ந்தோருக்குமான தேசிய பாதுகாப்புக்கு நிலையான தீர்வுக்குமான விசேட செயற்திட்டமாகும்.

இந்தப் போட்டி நாளை மறுதினம் நடைபெறும். எனவே இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை யாழ்.மாவட்டத்தில் வெளிவரும் சகல பத்திரிகைகளிலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பிரசுரிக்கப்படும் மனித உரிமைகள் சார்ந்த கட்டுரைகளை வாசித்து நடைபெறவுள்ள வினாடிவினாப் போட்டியில் அனைவரையும் கலந்து, வெற்றியீட்டிப் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் கேட்டுள்ளனர்.

# யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்கள் கழகங்களுக்கு நிதி ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து வடமராட்சி வடக்கு விளையாட்டுக் கழகங்களுக்கு கழக மைதானம் பராமரிப்பு, மதில் அமைப்பு, கழக அரங்கு அமைத்தல் மற்றும் விளையாட்டு உபகரணம் கொள்வனவு செய்தல் போன்ற தேவைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இந்த வகையில் சிவாஜிலிங்கம்- அல்வாய் நண்பர் விளையாட்டு கழகத்துக்கு ஒரு லட்சம் ரூபா, வல்வை விளையாட்டுக் கழகத்துக்கு 50 ஆயிரம் ரூபா, பருத்தித்துறை லீக் கழகத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கு 30 ஆயிரம் ரூபாவும் என தமது நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

கஜேந்திரன் எம்.பி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்துக்கு 10 ஆயிரம் ரூபாவும், தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகத்துக்கு 5 ஆயிரம் ரூபாவும், துன்னாலை வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்துக்கு 5 ஆயிரம் ரூபாவும் தமது நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.


பத்மினி சிதம்பரநாதன் எம்.பி- ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்துக்கு 40 ஆயிரம் ரூபா தமது நிதியிலிருந்தும், சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. வியாபாரிமூலை கலைமணி விளையாட்டுக் கழகத்துக்கு இரண்டு இலட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார் என பருத்தித்துறை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். (20)



குருநகர் நெய்தல் விழா - 2004 இல் இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகளில் மாணவிகளின் மீனவ நடனக் காட்சியைக் காணலாம். (206)



அண்மையில் வடக்கு - கிழக்கு விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அந்தனத்திடல் கிராமத்துக்கெனக் கட்டி முடிக்கப்பட்ட பொது மண்டபத்தை யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைத்தார். இந்தப் பொது மண்டபத்தைச் சம்பிரதாய பூர்வமாக அந்தணத்திடல் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரிடம் அரச அதிபர் ஒப்படைப்பதையும், விழாவுக்குத் தலைமைதாங்கிய பிரதேச செயலர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம் (13)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியர்களால் நடத்தப்பட்ட ஆசிரியர்தின விழாவில் குருபீடம் என்ற நாடகத்தில் ஆசிரியர் கல நாகேந்திரராஜா தோன்றும் ஒரு காட்சியை படத்தில் காணலாம் (17)

## தேசியமட்ட போட்டியில் வெற்றியீட்டியோர்

பவ்ரல் அமைப்பு சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையில் நடத்திய கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளான தமிழினி தயாளன் தேசிய மட்டத்தில் கட்டுரைப் போட்டியில் முதலாமிடத்தையும், சுகன்யா செல்வநாதன் பேச்சுப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (14)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : றெ.றொஷானி
முகவரி : வவுனியா

இரண்டாவது அகவையில்



பெயர் : ர.சாத்விகன்
முகவரி : பொலிகண்டி

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------
முகவரி :------------------
பிறந்த ஆண்டு:------------------

# ஒற்றுமைக்கான மக்கள் அரங்க செயற்திட்டம்!



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் 2 ஆம் வருட மாணவர்கள் தமது பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான அரங்க செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காகப் பதினொருபேர் கொண்ட குழுவாக இணைந்து பாடசாலைகளிலும், கிராமங்களிலும் ஒற்றுமைக்கான மக்கள் அரங்க செயற்திட்டத்தை நடாத்திவருகின்றனர்.

தமிழர்களின் ஒற்றுமையையும், பலத்தையும் அழித்து தமிழர்களைத் தனிமைப்படுத்த முயற்சிக்கும் அரசும், அரசுக்கு ஆலோசனையும் உதவியும் வழங்கிவருகின்ற சர்வதேச சமூகங்களின் நடைமுறைகளையும், அவற்றின் உண்மையான உள்நோக்கங்களையும் வெளிப்படுத்தி நிற்பதுடன், தமிழர்களின் ஒற்றுமையையும், தேசியத்தின் மீதான உறுதிப்பாட்டையும் வலியுறுத்தும் வகையில் தமது அரங்கச் செயற்பாடுகளை இவர்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

# புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியில் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கில் பணம் வைப்புச்செய்திருந்த சிறுவர்களில் - இந்த ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியாக முதல் மூன்று இடங்களையும் பெற்றுச் சித்தியடைந்தவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கொமர்ஷல் வங்கி முகாமையாளர் இரவீந்திரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம், 7500, 5 ஆயிரம் ரூபா பணப்பரிசுகள் வழங்கப்பட்டன.

# கட்டாக்காலி கால்நடைகளால் பயிர்ச்செய்கை நாசம்!

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேச வயல் நிலங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களை கட்டாக்காலிக் கால்நடைகள் நாசமாக்குகின்றன.

நெல் பயிரிடப்படும் வயல்களின் பரப்பளவு குறைவாக உள்ளதாகவும், இவ்வாறு கட்டாக்காலி கால்நடைகள் சேதம் விளைவிப்பதால் நெற்பயிரை அறுவடை செய்யமுடியாமல்போகும் நிலை உருவாகிவிடும் என நெற்பயிர்ச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

இவ்வாறு கட்டாக்காலி கால்நடைகள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து விளைநிலப்பரப்புக்குள் வருவதாகவும், சுழிபுரம் மேற்கு விவசாய சம்மேளன உறுப்பினர் திருமதி சி.பத்மலோசனி தெரிவித்தார்.

# கால்நடைகளின் எச்சங்களால் மருதங்கேணி சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

(மருதங்கேணி)

மருதங்கேணி பொதுச் சந்தைக்கு சுற்று மதில் இல்லாத காரணத்தால், கட்டாக்காலி கால்நடைகள் இரவு நேரங்களில் தங்கியிருந்து போடும் எச்சங்களால் சந்தைப்பகுதி பெரும் துர்நாற்றம் வீசுவதால் வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் சந்தைப் பகுதியில் வியாபாரம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. தற்காலிக கொட்டகையில் இயங்கும் இந்தப் பொதுச் சந்தை, இரவு நேரங்களில் கால் நடைகளின் தங்குமிடமாகவே மாறிவருகிறது. இந்தச் சந்தை கிழமையில் மூன்று நாட்கள் மாத்திரமே இயங்கிவருகிறது. மற்றைய நாட்களில் கால்நடைகளின் தங்குமிடமாகவே காட்சியளிக்கிறது.

பருத்தித்துறை பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டுவரும் இந்தப் பொதுச் சந்தையைப் புனரமைப்புச் செய்யுமாறும், இதற்குச் சுற்று மதில் அமைத்துத் தரும்படியும் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

# ஸ்கிறீன் பிறின்ரிங் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவின் ஸ்கிறீன் பிறின்ரிங் (திரை அச்சு) கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று மதியம் 12 மணிக்கு இந்த கல்லூரியின் நடராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக தீவகக் கல்விப் பணிப்பாளர் வி. மகேந்திரனும், சிறப்பு விருந்தினராக முறைசாராக் கல்விப் பிரிவு பணியாளர் கணபதியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் முறைசாராக் கல்விப் பிரிவு - கணினிப்பிரிவு மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரம் சம்பந்தமான வேலைத்திட்டத்திற்கென வவுனியா மாவட்டத்தில் 17 மில்லியன் ரூபா கையளிப்பு

வவுனியா மாவட்டத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் சுகாதாரம் சம்பந்தமான வேலைதிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு செய்து முடிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் வவுனியாவில் வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் நான்கு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், வேலைகளுக்கென நிகொட் நிறுவனத்தால் 17 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு 4.4 மில்லியன் ரூபாவும், செட்டிகுளம் வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் செட்டிகுளம் வைத்தியசாலை நீர் விநியோகம் என்பவற்றுக்கு 7.7 மில்லியன் ரூபாவும், உளுக்குளம் பிரதேச வைத்திய பிரசவ விடுதிக்கு 4.1 மில்லியன் ரூபாவும், தாதிமார் தங்கும் விடுதிக்கு 1.4 மில்லியன் ரூபாவும், சிதம்பரபுரப் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி விடுதிக்கு 2.1 மில்லியன் ரூபாவும் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டிருப்பதாக வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# பூநகரி நான்காம் கட்டைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை!

கிளிநொச்சி - பூநகரி 4 ஆம் கட்டைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதேபோன்று ஏனைய குடியிருப்புப் பகுதிகளிலும் மக்கள் பயணிக்கமுடியாத அளவுக்குக் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்தக் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்கவேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# பொருண்மிய மதியுரையகத்தால் சீமெந்துக்கல் தொழிற்சாலை திறப்பு

பொருண்மிய மதியுரையக நிறுவனத்தால் சீமெந்துக்கல் உற்பத்தித் தொழிற்சாலை திறப்பு விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் சி.விஜேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை பெருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா, பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் சுந்தரமூர்த்தி, செல்வரட்ணம், பாலச்சந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொழிற்சாலைக் கட்டடத்தை பொருண்மிய மதியுரையகத் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா நாடாவைவெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து இயந்திரங்களை பாலச்சந்திரன், மனோகரன், நேசநாதன் ஆகியோர் நாடாவை வெட்டி இயக்கி வைத்தினர். இறுதி நிகழ்வாக பொருண்மிய மதியுரையகத்தின் பணியாளர் சிவபாலமுகுந்தன் நன்றியுரை நிகழ்த்தினார்.

# கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தின் பதிவாளர் பிரிவின் நிழற்பட இயந்திரம் பழுது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பதிவாளர் பிரிவின் நிழற்பட இயந்திரம் பழுதடைந்துள்ள நிலையில், பதிவுகள் மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பதிவுகள் தேக்கமடைந்துள்ளன.

கடந்த வருடம் ஜுலை மாதம் யுனிசெப் நிறுவனத்தால் இந்த நிழற்பட இயந்திரம் வழங்கப்பட்டது. இந்த இயந்திரம் தகுந்த பராமரிப்பு வசதியின்மையால் பழுதடைந்து, இயங்கமுடியாத நிலையிலுள்ளது. இதனைத் திருத்துவதற்கான எந்த நடவடிக்கையையும் உரியவர்கள் மேற்கொள்ளாமையாலேயே பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதென, கிளிநொச்சி மாவட்ட மேலதிக பதிவாளர் நாகேஸ்வரி செல்வராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தச் செயலகம் நீண்ட நாட்களாக நிரந்தர எழுதுவினைஞர் இன்றிப் பயிலுநர் உதவியுடனேயே இயங்குகிறது. அத்துடன் பதிவுகளை மேற்கொள்ளவரும் மக்கள் உரிய ஆவணங்களின்றி வருவதாகவும், தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதால், கால்நடைக்களை கட்டுப்படுத்தி வளர்க்குமாறு கால்நடை வளர்ப்போருக்கு அறிவித்தல் விடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை பெரும்பாலானோர் கடைப்பிடிக்கத் தவறுகின்றனர். இதனால் பரவலாக பல பிரதேசங்களில் பயிரழிவுகள் ஏற்பட்டுள்ளன.

சிலர் தனிப்பட்ட முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, கால்நடைகளைக் கட்டுப்படுத்தத் தவறுகின்றனர். பொதுவாக முரண்பாட்டைத் தவிர்த்து அனைவரும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தி வி[illegible]சாய நடவடிக்கைக்கு உதவுமாறு விவசாயத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.







வவுனியா மாவட்டத்தில் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தன்று வவுனியா மகளிர் அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் - தமிழீழத் தேசிய கொடியை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றுவதை முதலாவது படத்திலும், பொதுச் சுடரை வவுனியா மாவட்டத் தேசிய எழுச்சி பேரவை அமைப்பின் தலைவர் செ.சபாநாதன் ஏற்றிவைப்பதை இரண்டாவது படத்திலும், மாதர் சங்கத்தால் - தேசியத் தலைவருக்கான வாழ்த்துப் பா்வை மாதர் சங்கப் பிரதிநிதி மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: கனகரவி)*

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு வத்திராயன் ஆகிய பிரதேச மக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது, இந்தப் பிரதேசம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு, மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் கழிந்த நிலையிலும் எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படாதுள்ளது.

இந்தப் பிரதேச மக்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.





## தையற் பயிற்சி நிலையம் திறப்பு

முல்லைத்தீவு - பாண்டியன் குளம் பகுதியில் தையற்பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இந்தப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப் படவுள்ளதால், இந்தப் பிரதேசத்தில் உள்ள தொழில் வாய்ப்பற்ற யுவதிகளுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையுமென எதிர்பார்க்கப் படுகிறது.

எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதிமுதல் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருட பயிற்சி நெறியாக இது அமையும். இதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சியை பயிலவிரும்பும் யுவதிகள் தமது கிராம சேவை உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பிக்கும்படி மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ம.ஜெகன் தெரிவித்தார்

## அணைக்கட்டு உடைப்பெடுத்தது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி செம்மண் குன்று உவர்நீர் தடுப்பு அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளது.

பூநகரி செம்மண்குன்று உவர்நீர்தடுப்பு அணைக்கட்டு உடைப்பெடுத்து, பூநகரி மன்னார் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால், இந்த வீதியூடாக மக்கள் பயணம் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. இதனால் இந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## வடிகால் இன்மை

கிளிநொச்சி - பூநகரி ஜெயபுரம் சந்தைப் பகுதியில் தகுந்த வடிகால் இன்மை மற்றும் பற்றைகள் துப்புரவு செய்யப்படாமை போன்ற காரணங்களால், மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பூநகரி பிரதேச சபையின் பராமரிப்பிலுள்ள இந்த சந்தைப் பகுதி உரிய முறையில் பராமரிக்கப்ப [illegible] இந்தப் பகுதியில் மழைநீர் தேங்கி நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# முழங்காவில் பிரதேசத்தின் முயற்சியாளருக்கு சுயதொழில் முயற்சிக் கடன்வழங்கல்!

கிளிநொச்சி - முழங்காவில் பிரதேசத்தில் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால், யு.என்டி.பி நிறுவன நிதியுதவியுடன் தெரிவுசெய்யப்பட்ட சுயதொழில் முயற்சியாளர்கள் 25 பேருக்கு - மூன்று லட்சத்து 75 ஆயிரம் ரூபா சுயதொழில் முயற்சிக் கடனாக வழங்கப்பட்டது.

முழங்காவில் பிரதேச பெண்கள் மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - கருத்துரைகளை முழங்காவில் பிரதேச அரசியற்துறைப் பொறுபபாளர், முழங்காவில் பிரதேச பெண்கள் மேம்பாட்டுத் தலைவி, மாதர் சங்கத் தலைவி, முழங்காவில் கிராம அலுவலர் ஆகியோர் நிகழ்த்தினர்.

# கால்நடை வளர்ப்போருக்கு இன்று பயிற்சி வகுப்பு!

(கிளிநொச்சி)

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன், இன்று காலை சி.ஜ.சி தீவன மற்றும் கால்நடை வைத்திய நிபுணர்களால் கால் நடைவளர்ப்போருக்கான பயிற்சி வகுப்பு கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பு - கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்தினரின் அனுசரணையுடன், கால்நடை வளர்க்கும் நவீன முறைகள் பற்றியும், கால்நடைகளுக்கான நோய்களை இனங்காண்பது பற்றியும், கால்நடை வளர்ப்புப் பற்றிய விரிவான அறிவுறுத்தல்களும் இடம்பெறவுள்ளன.

இதில் கால்நடை வளர்க்கும் பண்ணையாளர்கள் கலந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

# செம்பியன்பற்று சுண்டிக்குளம் வீதி புனரமைப்பு வேலைகள் மந்தகதியில்

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று சுண்டிக்குளம் வீதி மந்த கதியிலே புனரமைக்கப்பட்டுவருகிறதென அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நீண்ட நாட்களாக இந்த வீதியின் புனரமைப்பு வேலைகள் நடைபெறுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அத்துடன் தற்போது பெய்து வரும் மழையால் இந்த வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை*
*இன்மையா வையாது உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சர்வதேசங்களின் மத்தியில் ஜனாதிபதி நெருக்கடி நிலையில் அரசாங்கம்

இப்போது தென்னிலங்கை அரசியலில் பெரும் சர்ச்சைக்கும், ஆய்வுக்கும் உள்ளாகியுள்ள விடயம் தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரை பற்றியதேயாகும்.

இந்தமுறை மாவீரர் நாள் உரையில் தேசிய மற்றும் சர்வதேசரீதியில் எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது போன்று, தேசியத் தலைவர் இலங்கை அரசுக்கும் – தென் பகுதி மக்களுக்கும் மிகத் தெளிவானதும், தீர்க்கமானதும், இறுக்கமானதுமான சில செய்திகளைச் சொல்லியிருந்தார்.

அதில் அவர் யுத்தமும் – சமாதானமுமற்ற இன்றைய சூழலை தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும், இந்த நிலையை அரசு தொடருமானால் அதன் விளைவுகள் மீண்டும் விடுதலைக்கான தமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தமிழ் மக்களைத் தள்ளும் எனக் கூறியிருந்தமையானது, அரசு தரப்பில் குறிப்பாக ஜனாதிபதி தரப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான சந்தேக அலைகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை தென்னிலங்கையில் இருந்து கிடைக்கும் செய்திகள் உணர்த்துவதாகவுள்ளது. மீண்டும் விடுதலைப் புலிகள் போரைத் தொடங்கப்போவதற்கான முன்னறிவிப்பை பிரபாகரனின் உரை கோடிட்டுக் காட்டுகிறது என்பதையே தென்பகுதி அரசியல் ஆய்வாளர்களின் கருத்து வெளிப்பாடுகள் தெரிவிப்பதாகவும், இதன் காரணமாக அரசு வட்டாரங்களில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

இன்றைய சமாதான முயற்சிகளின் தேக்க நிலைக்குப் பிரதான காரணம் – சிங்கள ஆட்சியாளர்களின் அந்த முயற்சிகள் மீதான விசுவாசமின்மையே என்பதில் இரு மாறுபட்ட கருத்து எழவாய்ப்பே கிடையாது.

தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஆரம்பகாலம் முதலே சமாதான முன்னெடுப்பு நகர்வுகளுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டவர்களில் தலைமைத்துவத்தின் கீழ் இயங்குபவையேயாகும்.

எனவே, சமாதானம் தொடர்பாக அவர்கள் எந்தக் கருத்தை முன்வைத்தாலும் – எத்தகைய அறிவிப்பை வெளியிட்டாலும் அது போலித்தனமானதும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டதுமாக இருக்கும் என்பதில் ஐயமேயில்லை.. இதனை அரசோ, ஜனாதிபதியோ மறுத்தாலும் அதனைத் தமிழ் மக்கள் எந்த வகையிலும் நம்பத் தயாராக இல்லை.

கடந்தகால சிங்கள அரசியல் தலைமைகளின் ஏமாற்று தந்திரோபாயங்களால் ஏமாளிகளாக்கப்பட்ட தமிழ்மக்களின் அனுபவப் பட்டறிவு அவர்களை அந்த நிலையை தீர்க்கமாக எடுக்கவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒருபுறம் இராணுவத்தை சகலவழிகளிலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் வகையில் படைத்துறைக்கான கொள்வனவுகளை அதிகப்படுத்தி பாதுகாப்புத் துறைக்கான நிதியை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்து ஒதுக்கீடு செய்துகொண்டு இந்தியா – அமெரிக்கா போன்ற நாடுகளுடன் தமிழர் நலன்களை உரிமைகளை பாதிக்கும் வகையிலான ஒப்பந்தங்களை மேற்கொள்வதில் முனைப்புடன் செயற்பட்டபடி இராணுவச் சமநிலை பேணல் என்ற புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டின் விதிகளைப் புறந்தள்ளி செயற்படும் ஜனாதிபதியும் – அரசும் போரை ஆரம்பிப்பதற்கான உள்நோக்குடன் கூடிய திட்டங்களையே மேற்கொண்டு வருகின்றதென்பது தெளிவான நிலையில் அந்தப்பக்கமிருந்து சமாதான நகர்வு தொடர்பாக கூறப்படும் விடயங்களை நம்புவதென்பது அசட்டுத்தனமான காரியமேயாகும்.


இந்த நிலையில் தமிழ்மக்கள் தரப்பின் சமாதான முயற்சிகள் தொடர்பான நம்பிக்கையீனம் குறித்தும், அவர்கள் எதிர்காலத்தில் தவிர்க்கவே முடியாத நிலையில் மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும் நடவடிக்கை குறித்தும் மாவீரர் நாள் உரையின்போது தெளிவுபடுத்திக் கூறவேண்டிய கடமை தேசியத் தலைவருக்கு ஏற்பட்டதெனலாம்.

முப்படைகளின் பலத்தை போர்நிறுத்தகாலத்தில் அதிகரித்து அரசு போருக்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்டுள்ளதென அமெரிக்க இராணுவ ஆய்வாளர்களே வெளிப்படையாகக் கூறும் நிலையில், புலிகள் யுத்தத்தை தொடங்குவார்கள் என அறிவதில் ஜனாதிபதி ஆர்வம். அது குறித்து நோர்வே அனுசரணையாளர்களின் கருத்தை அறியமுயல்வது முரண்நகையான விடயமாகும்.

தேசியத் தலைவரின் உரையில் யுத்தமா? சமாதானமா? என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு அரசின் சமாதான முயற்சிகள் மீதான நேர்மையானதும், விசுவாசமானதும், உறுதியானதுமான தன்மைகளைப் பொறுத்தே அமையும் என்பதையே தெளிவுபடுத்துவதாக இருக்கிறது.

இந்தநிலை அதற்கான முடிவை எடுப்பதும் அதன் விளைவுகளை எதிர்கொள்வதும் ஜனாதிபதியும் அரசும் தென்பகுதி மக்களுமாகவே இருப்பர்.

# நாடும் நடப்பும்




# எத்தகைய இடையூறு நேர்ந்தாலும் சமாதானம் சீர்குலைய அனுமதியேன்

## அக்கரைப்பற்றில் அதிரடிப்படை அத்தியட்சகர்

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பலனாக கடந்த 3 வருட காலமாக சமாதானக் காற்றைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். அதனைச் சீர்குலைக்க சில தீயசக்திகள் ஆங்காங்கே வன்முறைகளை நடாத்திவருகின்றன.

எத்தகைய இடையூறுகள் வந்தாலும், கிடைத்த சமாதானத்தை சீர்குலைய அனுமதிக்கமாட்டேன். இதற்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறு அக்கரைப்பற்றில் உரையாற்றிய விசேட அதிரடிப்படையின் அக்கரைப்பற்று பிராந்திய பொலீஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன வேண்டுகோள் விடுத்தார்.

அக்கரைப்பற்று பிரஜைகள் பாதுகாப்புக் குழுவை அமைக்கும் மக்கள் பிரதிநிதிகள் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை அக்கரைப்பற்று சென்.ஜோன்ஸ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படைப் பொறுப்பதிகாரி ஜி.கொடித்துவக்கு ஏற்பாடு செய்த கூட்டத்துக்கு 100 இற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் சமூகமளித்திருந்தனர். சமாதானம் நீடித்து நிலைக்க வேண்டுமென உளமார விரும்புகிறேன். அண்மையில் மகாஓயா வீதியில் இரவு 10 மணியளவில் வரும்போது எமது மக்கள் 'பிங்கம' ஆலய நிகழ்வுக்குச் சென்று விட்டு சந்தோஷமாக வீதி திரும்பிக் கொண்டிருப்பதைக் கண்டேன். இது சமாதானத்தின் பிரதி பலிப்பு.

முன்னைய காலகட்டத்தில் மாலை 6 மணியாகியதும் வீதி வெறிச்சோடிவிடும். சனநடமாட்டமேயில்லை. நாட்டில் சமாதானம் ஏற்பட்ட போதிலும், தினமும் கொழும்பு போன்ற பகுதிகளில் கொலை, கொள்ளை, வல்லுறவுச் சம்பவங்கள் நடைபெறத்தான் செய்கின்றன. ஊடகங்கள் அவற்றுக்குச் சாட்சிகள். ஆயுதகலாசாரம் நீடிக்கும் வரை வன்முறை தொடரும். எது எப்படியிருப்பினும் எமது பிராந்தியத்தில் இவை இடம்பெறக் கூடாது என்பதே எமது எண்ணம்.

எனவே தமிழ், முஸ்லிம் சிங்கள மக்கள் வாழும் இந்தப் பிராந்தியத்தில் தொடர்ந்து சமாதானம் நிலைத்து, மக்கள் நிம்மதியாக வாழ அனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன் என்றார்.

பிரஜைகள் பாதுகாப்புக் குழுவின் பணிகள் பற்றி சப் இன்ஸ்பெக்டர் பியசேன விளக்கமளித்தார்.

# திருகோணமலையில் புதிதாக இராணுவ முகாம்கள் அமைப்பு

திருகோணமலை நகரில் - கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, சில இடங்களில் புதிதாக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவது என்ற போர்வையில் இவை அமைக்கப்பட்டுவருகிறது. திருகோணமலை நகர மத்தியில் கோணேசர் ஆலயவீதியில் உயர்ந்தபாடு என அழைக்கப்படும் தமிழ் மக்களின் பூர்வீக கரைவலை செய்யும் இடத்தில் கடந்த சனிக்கிழமை ஒரு தற்காலிக முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசம் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள மக்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, சிங்களப் பிரதேசமாக மாற்றம் பெற்றுள்ளது.

அதேபோன்று சிறிமாபுரம் சந்தியில் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான வீட்டிலும் இவ்வாறானதொரு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், வரோதயநகர் கந்தையா வீதியில் தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு அண்மித்ததாகக் காவலரண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை பிரட்றிக்கோட்டையில் இராணுவத்தின் பாரிய முகாம் ஒன்று உள்ளது. அதிலிருந்து சுமார் 300 மீற்றா தூரத்தில் இவ்வாறு ஒரு புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.(04)

## வடமராட்சி கிழக்கு மின்விநியோகம் தாமதமடைவதால் மக்கள் ஏமாற்றம்

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மின் விநியோகம் தாமதமாவதை முன்னிட்டு, பெரும் ஏமாற்றம் அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பளைப் பிரதேசத்தில் மின்சாரம் பெறுவதற்கு அந்தப் பகுதி மக்கள் மின்சாரசபையிடம் விண்ணப்பித்தும், இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையென்றும், தாம் மின்சாரம் பெறுவதற்கு மின் இணைப்பு செய்தும் பல நாட்களாக மின்சாரத்துக்கு காத்திருப்பதாகவும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

பளைப் பிரதேசத்துக்கு மின் இணைப்புக்கள் செய்ய முடியுமாயின் [illegible] சந்தியிலிருந்து மருதங்கேணிக்கு மின்சாரம் எப்போது வழங்கப்படும் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (17)

## கடற்தொழிலாளர் சமாசத்துக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளனர்.

இதில் எம்.கே.சிவாஜிலிங்கம் 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவையும், கே.ஈழவேந்தன் 3 லட்சம் ரூபாவையும் ஒதுக்கியுள்ளனர்.

இந்த நிதியைக் கொண்டு வடமராட்சி வடக்கு மீனவர்களின் சந்தைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## உதைபந்தாட்டப் போட்டி தொடர்பான கலந்துரையாடல்

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டிகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளரும் கலந்து கொண்டு, உதைபந்தாட்டம் சம்பந்தமான ஒழுங்குகளை மேற்கொள்ளவிருப்பதால், வலிகாமம் லீக்கில் அங்கம்வகிக்கும் சகல விளையாட்டுக்கழக அணி வீரர்களையும் தவறாது கலந்துகொண்டு, தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் மு.நடராஜன் அறிவித்துள்ளார். (101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்டுரை... –பரணி


# சிங்களத்தின் உண்மைத் தோற்றம் உலகின் கண்களைத் திறக்குமா?



ஜனாதிபதி சந்திரிகாவிடமும், அவர் கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் விடுதலைப்புலிகள் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றனர்.

அதாவது, தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டை அதிகார பூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.

தென்னிலங்கை அரசியலரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் குறித்துத் தெளிந்த பார்வையும், நேரிய தரிசனமும், ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமானால், எமது மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு, நிரந்தரமான தீர்வு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்து



வதில் அர்த்தமுண்டு. அல்லாத பட்சத்தில் நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை.

இதுதான் சிங்களத்துக் கட்சிகளுக்கு அவை ஆளும் கட்சிகளாக இருந்தாலென்ன, எதிர்க்கட்சிகளாக இருந்தாலென்ன அவைகளுக்குத் தேசியத் தலைவர் தனது 2004 மாவீரர் தின உரையில் விடுத்த வேண்டுகோளாகும்.

இதற்கு ஆளும் கட்சியும் சரி, எதிர்க்கட்சியும் சரி இதுவரை பதிலேதும் வழங்கவில்லை. அரசுத் தகவல் திணைக்களம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு புலிகள் நிபந்தனை விதிப்பதாகவும், அதனை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் அறிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி, தலைவரின் மாவீரர் உரை பற்றி விரைவில் கருத்துத் தெரிவிப்பாரென்று வேறொரு செய்தி கூறுகிறது.

இதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்ற விடயத்தில் தமது கட்சி தெளிவாகவே உள்ளது. எனவே பிரபாகரனின் உரை தொடர்பாக அரசே பதில்கூற வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஆளும் கூட்டணியின் அங்கமான ஜே.வி.பி. புலிகளுக்கு இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகம் கொடுத்தால், ஆயுதக் கிளர்ச்சி வெடிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கின்றது. அத்துடன் இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார அலகை வெளிநாட்டவர் இலங்கை அரசிடம் திணிப்பதாகவும் கூறுகின்றது.

மொத்தத்தில் இந்த மூன்று முக்கிய கட்சிகளும் தலைவர் குறிப்பிட்ட 'தாயகம், தேசியம் சுயநிர்ணயம் ஆகியன பற்றிய தங்களது கொள்கைகளை முன்வைக்காது இழுத்தடிக்கவே விரும்புகின்றன.

இலங்கை அரசுடன் தான் தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த உடன்பாடு கண்டனர். அரசுடன் அப்பொழுது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பொழுது, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்தது. எனவே ஒப்பந்தம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்ததாகக் கொள்ளலாகாது. இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியிலிருந்த பொழுது நாகலாந்து கிளர்ச்சியாளர்களுடன் உடன்பாடு ஏற்பட்டுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோற்றுக் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது. அவ்வாறு ஆட்சியமைத்த காங்கிரஸ் நாகலாந்துக் கிளர்ச்சியாளர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையை முந்தைய ஆட்சி விட்ட இடத்திலிருந்து தொடர்கின்றது. பா.ஜ.க ஆட்சியுடன் ஏற்பட்ட இணக்கப்பாடு எமக்கு உடன்பாடற்றது எனக் கூறாது, புதிய ஆட்சி பேச்சுவார்த்தையைத் தொடர்வது அரசியல் பண்பாடும், சிறந்த நெறி முறையுமாகும். ஆனால் இங்கு நிலைமை தலைகீழாகவே உள்ளது. நாட்டு நலனில் அக்கறை இலலாத 'கட்சி அரசியல்' இங்கு முன்னிலைப்படுகின்றது. அதனிலும் மேலாகக் கட்சி நலனைவிட தனிமனித அதிகார வேட்கை மேலோங்கி இருப்பதையே காணமுடிகிறது.

அடுத்த அதிகாரம் யாருக்கு? என்பதிலேயே முழுக்கவனமும் கொழும்பில் தற்பொழுது எழுந்துள்ளது. ஜனாதிபதி பதவியை எப்படியும் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் ரணில் பெருமுயற்சியில் இறங்கியுள்ளார். மூன்றாவது முறையாக ஜனாதிபதிப் பதவிக்கு வரமுடியாமல் அரசியலமைப்புச் சட்டம் இருப்பதால், மாற்றீடாக ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றி, அதிகாரமுள்ள பிரதமராக வரப் பெருமுயற்சியில் இறங்கியுள்ளார் சந்திரிகா. தனித்து நின்று ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி கொள்வது முடியாது என்பதால் ஜே.வி.பி.யுடன் இணைந்து எதனையும் இழந்து பிரதமராக அதிகாரத்தோடு இருக்கவே சந்திரிகா விரும்புகிறார்.

இந்த நிலையில் ஜே.வி.பி.யினரின் வெளிப்படையான தீவிர சிங்கள பௌத்த இனவாதத்துக்கு அடிபணிந்து போவதைத் தவிர சந்திரிகாவுக்கு மாற்றுவழி இல்லை என்பதே யதார்த்தமாகும்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார அலகு பற்றி முதலில் பேசுவோம் என்பது புலிகளின் நிபந்தனை என்று சந்திரிகா கூறுகிறார். பேச்சுவார்த்தை தொடங்கி ஆறு திங்கள்கள் முடிவடைந்த நிலையில் சமாதான உடன்படிகையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளும், பேச்சுவார்த்தை மேசையில் கண்ட உடன்படிக்கைகளும் நடைமுறைப்படுத்த முடியாமல் போனமை யாவரும் அறிந்ததே.

வெறுமனே பேசிக் கொண்டு, தீர்மானங்களை நிறைவேற்றி விட்டுக் காலத்தைக் கழிப்பதை ஏற்க முடியாத தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியமையும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார அலகு தேவை என்று கூறியதும் அனைவருக்கும் தெரிந்ததே. இந்த நிலையில், அரசு மூன்று வரைவுகளை இடைக்காலத் தன்னாட்சி அலகு பற்றி முன்வைத்ததும், அவை வெறும் உப்புச் சப்பற்ற வடிவங்கள் என்பதால் விடுதலைப் புலிகள் அரசியல் சட்ட நிபுணர்கள், சட்ட அறிஞர்கள், துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு தன்னாட்சி அதிகார அலகு பற்றிய வரைவை முன்வைத்தனர்.

இதற்கமையப் பேச்சுவார்த்தை தொடங்க ஆயத்தமாக இருந்த பொழுது, சந்திரிகா பல தில்லுமுல்லுகளைச் செய்து ஈற்றில் நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்தி அறுதிப் பெரும்பான்மை இல்லாத ஆட்சியை அமைத்துத் தற்பொழுது பெரும்பான்மையும் பெற்றுள்ளார்.

பேச்சுவார்தை தொடங்க இருந்த நேரத்தில் எல்லாவற்றையும் குழப்பியவர் சந்திரிகா. சந்திரிகா குழப்பியிராவிட்டால் பேச்சுவார்த்தை தொடர்நதிருக்கும். இதற்கு மாறாக நடந்து கொண்ட சந்திரிகா, புலிகள் புதிய நிபந்தனை விதிப்பதாகக் கூறுவது விந்தையிலும் விந்தையே. பேச்சுவார்த்தை என்பது சென்ற அரசு விட்ட இடத்திலிருந்தே தொடங்கப்படவேண்டும்.

அதுதான் உலகம் பூராவும் நடைமுறையிலுள்ள வழக்காகும். ஆனால் ஆட்சியாளர் மாறியதும், எழுதிய ஒப்பந்தங்களை மீறி நடக்கும் பண்பைக் கொண்ட அரசாக உலகில் இருக்கும் ஒரே நாடா இலங்கை காட்சியளிக்கின்றது. இன்றைய ஆட்சி ஏதாவது ஒப்பந்தம் செய்தால் அதை மீறி அடுத்த ஆட்சி நடக்கும். அதை உலகம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது தான் சிங்களத் தலைவர்களின் கொள்கையாகும்.

இத்தகைய ஏமாற்று வேலைகளையே கடந்த பல ஆண்டுகளாகச் சிங்கள ஆட்சியாளர்கள் செய்து வந்துள்ளார்கள். ஒப்பந்தங்களை எழுதி விட்டு பின்னர் மாற்றுக் கட்சிகளைக் காட்டி அவற்றை நிறைவேற்றாது விடுவதும், கிழித்தெறிவதும், அவர்களது அரசியலாகும். அந்த ஒப்பந்தங்கள் முழு உரிமைகள் பற்றிய ஒப்பந்தங்கள் கூட இல்லை.

ஏதோ இடைக்கால ஏற்பாடாகப் பிரதேச சபை, மாவட்ட சபை பற்றிய ஒப்பந்தங்களாகவே அவை அமைந்திருந்தன. ஆனால் இன்று 17,780 மாவீரர்களின், 80,000 பொது மக்களின் ஈகத்தால் பேச்சுவார்த்தை தொடங்கிய நிலையில், தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றலாம் என்று சிங்கள ஆட்சியாளர்கள் நினைத்தனர்.

அதனால் மௌனமை உள்ளமும், அமைதியானவருமான தந்தை செல்வாவை ஏமாற்றியது போன்று தற்பொழுதும் ஏமாற்றித் தங்களது பதவிக் காலங்களை இழுத்தடிக்கலாம் என்று நினைக்கிறார்கள். அவர்களிடம் தமிழ் மக்களது உரிமைகள் பற்றிய சிந்தனையோ, தீர்வுத் திட்டமோ எதுவும் இல்லை என்பது உண்மையாகும்.

ஆனபடியால் தான் தமிழீழத் தேசியத் தலைவர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை பற்றிய சிங்களத்துக் கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டை வெளியிடுமாறு அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆளும் கட்சி மட்டுமன்றி எதிர்க்கட்சியும் தெளிவாக இவை பற்றித் தெரிவிக்க வேண்டுமென்பதே மாவீரர் உரை மூலம் அவர் விடுத்த வேண்டுகோளாகும்.

தமிழினம் ஏமாந்த காலம் முடிந்து விட்டது. இப்பொழுது சம பலத்துடன் பேச்சுவார்த்தை மேசையில் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகளாகப் புலிகள் இருக்கின்றனர். ஏமாற்றப்பட முடியாத தலைவர் தற்பொழுது தமிழினத்துக்குக் கிடைத்திருக்கின்றார். விடுதலையை நோக்கிய பயணம் சரியான பாதையில் விரைவாகச் சென்று கொண்டிருக்கின்றது.

இதைத் தடுக்கச் சிங்கள ஆட்சியாளர்கள் பலவித தடங்கல்களைச் செய்து வருகின்றனர். அவர்களது திட்டங்கள் யாவும் நொருங்கிப் போய்விட்டன. மக்களைப் பிரித்து, பிரதேச வாதங்களை வளர்த்து பயன்பெற முனைந்து தோல்வி கண்டு விட்டனர்.

இது வரை காலமும் ஆயுதப் போராட்டம் வெற்றிகரமாக நடந்த பொழுது, மக்கள் ஆயுதப் போராட்டத்துக்கு மிக உறுதியான ஆதரவைக் கொடுத்தார்கள். ஆனால் மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றவர்கள் கூர்மையடைந்த போராட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்கவில்லை. நாடாளுமன்றத்திலே இருந்த பலத்தைப் போராட்டத்துக்கு ஆதரவான குரலாக ஒலித்திருந்தால் தமிழினத்தின் ஒற்றுமை கண்டு சிங்களம் பணிந்து வந்திருக்கும். ஆனால் நடந்ததோ துயரமான நிகழ்வுகளே. அந்தத் துயரங்கள் இன்று இல்லை என்பது மகிழ்வுக்குரியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று தனது பங்கினை - தமிழ் மக்கள் அவர்களுக்கு இட்ட ஆணையை நிறைவேற்ற செயற்படுவது தமிழினம் பிரிக்க முடியாதவாறு ஒன்றுபட்டுள்ளதை உலகிற்குக் காட்டி நிற்கின்றது.

இதனைப் பெறுக்காத அரசு அரசியல் யாப்புக்கு விரோதமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகின்றார்கள் என்று கூறி அவர்களது குரல்வளையை அடக்கப் பார்க்கின்றனர். ஆனால் அவைத் தலைவர், கருத்துச் சுதந்திரத்தில் தலையிட முடியாது என்று கூறியுள்ளமை இடைக்கால ஆறுதலாக உள்ளது. இது நிரந்தரமல்ல. ஏனெனில் தமிழ் மக்களின் குரல் வளையை நசுக்க அரசு பல்வேறு வகைகளைக் கையாளும் என்பது திண்ணம்.

சோல்பரி அரசியற் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த, இடது சாரிகள் அந்த சோல்பரி அரசியல் திட்டத்தை எதிர்த்துக் குரல் எழுப்பினார்கள் அன்று. பின்னர் 1972 இல் அரசியலமைப்புக்கு மாறாகப் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்து ஆட்சி செய்தது ஐக்கிய முன்னணி அரசு. 1815 இல் இழந்த இறைமையை 1972-05-22 இல் பெற்றுவிட்டதாகச் சிங்களம் பெரு மகிழ்ச்சியடைந்தது.

இன்று, 1978 அரசியல் யாப்புக்கு முரணாக அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டுவருவோம் என்று அரசியல் யாப்பை உதாசீனம் செய்து வருகின்றனர் ஆட்சியாளர். இவையெல்லாம் அரசியல் யாப்புக்கு முரணானதாக அவர்களுக்குத் தெரியவில்லை. தமிழன் அந்நியரிடம் இழந்த (சிங்களவரிடம் இறைமை இழக்கப்படவில்லை) தனது இறைமையை மீட்பதற்காகப் பேசுவது அரசியலமைப்பின் 6 ஆவது திருத்தத்துக்கு எதிரானது என்று கூறி நடவடிக்கை எடுக்க முயல்வது தமிழினத்தின் குரல் வெளியே போகாமல் தடுக்கவேயாகும். இதனால் தமிழ் மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்க முடியாது என்பது வரலாறாகிவிட்டது. எத்தனையோ இடர்களைத் தாண்டி இன்று தமிழ்த் தேசிய இனத்தின் விடிவை நோக்கிய வேளையில், சிங்களம் உண்மையை உணர்ந்து தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயத்தை அங்கீகரிக்க முன்வரவேண்டும். இது காலத்தின் கட்டாயம். இந்த யதார்த்தத்தை உணர மறுக்கும் சிங்களக் கட்சிகள், சிங்கள மக்களுக்கே இன்னல் விளைத்தவர்கள் ஆவார்கள். சிங்களத்தின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து கொண்டே போகின்றது. உதவி வழங்கும் நாடுகள் முற்றாகவே கையை விரிக்கும் நிலை வரும். அப்பொழுது சிந்திப்பதைவிட, தலைவர் ஆற்றிய மாவீரர் நாள் உரையின் உண்மைத் தன்மையை உணர்ந்து புத்தி சாதுரியத்துடன் சிங்களம் நடந்தால் நன்று.

மாவீரர் நாள் உரையில் தலைவர் விடுத்த வேண்டுகோளுக்குச் சிங்களக் கட்சிகள் அளிக்கப் போகும் பதில்தான் என்ன? பதிலளிக்காமல் காலத்தை இழுத்தடிக்க முடியுமா? அல்லது ஒரு தேசிய இனத்தின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்களுக்குக் கிடையாது என்று கூறிவிட முடியுமா? இதற்கான பதிலைத் தமிழ் மக்கள் மட்டுமல்ல உலக நாடுகளுமே எதிர்பார்த்திருக்கின்றன. தமிழ் மக்களுக்குச் சிங்களச் கட்சிகளின் உண்மைத் தோற்றம் பற்றி நன்கு தெரியும். ஆனால் உலக நாடுகளுக்குத் தான் இதற்கான பதில் மிகவும் தேவையானது.

சிங்களத்துக் கட்சிகள் இந்தப் பிரச்சினையில் எவ்வளவு தூரம் தூய்மையாக நடக்கின்றன என்பதை அவர்கள் கூறும் பதிலை வைத்து உலகம் நன்கு புரிந்து கொள்ளும். அப்பொழுதாவது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முழுமையாக அங்கீகரிக்க வருவார்களா? வரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பாகும். ❒



◆◆◆◆

***பேச்சுவார்த்தை தொடங்க இருந்த நேரத்தில் எல்லாவற்றையும் குழப் பியவர் சந்திரிகா. அவர் குழப்பியிராவிட்டால் பேச்சுவார்த்தை தொடர்ந்திருக்கும். இதற்கு மாறாக நடந்து கொண்ட சந்திரிகா, புலிகள் புதிய நிபந்தனை விதிப்பதாகக் கூறுவது விந்தையிலும் விந்தையே. பேச்சுவார்த்தை என்பது சென்ற அரசு விட்ட இடத்திலிருந்தே தொடங்கப்படவேண்டும். அதுதான் உலகம் பூராவும் நடை முறையிலுள்ள வழக்காகும்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் ஜனாதிபதியாக ஹமீட் ஹர்சாய் பதவியேற்பு!



கடந்த ஒக்ரோபர் மாதம் ஆப்கானில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அந்த நாட்டு இடைக்கால ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் உத்தியோக பூர்வமாக நேற்றையதினம் ஆப்கான் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

இவரது இந்தப் பதவியேற்பு வைபவத்தில் அமெரிக்க துணை ஜனாதிபதி டிக்சென்னி, அமெரிக்க பாதுகாப்பு செயலர் ரம்ஸ் பீல்ட் உட்பட 150 விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பதவியேற்பை முன்னிட்டு தலைநகர் காபூலில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. தலிபான்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் காரணமாக சாதாரண பொதுமக்கள் அனைவரையும் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு படையினர் தெரிவித்திருந்தனர். தலைநகரிலுள்ள விமான நிலையத்திலிருந்து ஜனாதிபதி மாளிகை வரையான 4 கி.மீற்றர் நீளமான வீதிப் போக்குவரத்தைபொலிஸார் தடைசெய்ததுடன், அமெரிக்க விமானங்கள் வான்வழி பாதுகாப்பை வழங்க படையினர் வீதி ரோந்திலும் ஈடுபட்டனர்.

ஆப்கானில் நடைபெற்ற தேர்தலை குழப்ப போவதாக தலிபான்கள் தெரிவித்திருந்தும் அது தோல்வியில் முடிவடைந்தமையால் தற்போது ஹர்சாயின் பதவியேற்பை அவர்கள் குழப்பலாம் என்ற அச்சம் காரணமாகவே இந்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை-

ஆப்கான் சென்றுள்ள அமெரிக்க உப ஜனாதிபதி டிக்சென்னி தலைநகருக்கு அருகிலுள்ள பக்ராம் விமானப்படை அலுவலகத்தில் அமெரிக்கப்படைகளை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது ஆப்கான் மக்கள் தற்போதுதான் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் அனுபவிப்பதாக தெரிவித்தார்.

## நேபாளத்தில்

# மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 15 பேர் சுட்டுக்கொலை!

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 15 பேர் சுட்டுக்கொல்லப் பட்டனர். ஒரு நேபாள இராணுவ வீரரும் இந்த தாக்குதலில் பலியானார்.

நேபாள நாட்டில் மன்னர் இப்சிப்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர். இவர்களை ஒடுக்க நேபாள இராணுவம் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இநத நிலையில் கடந்த இரண்டு வாரங்களாக பிரதான வீதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மரங்களை வெட்டிப் போட்டும், பாறைகளை உருட்டிவிட்டும் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

பொதுமக்கள், இராணுவத்தினர் மீதும் இவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பார்ட்டியா மாவட்டத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஏற்படுத்திய தடைகளை அகற்றும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது அவர்களை நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். நீண்ட நேரம் நடைபெற்ற இந்தச் சண்டையில் 15 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன் ஒரு நேபாள இராணுவ வீரரும் இந்த மோதலில் பலியானார்.

# இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் ஹமாஸ் உறுப்பினர்கள் இருவர் பலி

காசாப் பகுதியில் இஸ்ரேலியப் படையினருக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஒருமணிநேர மோதல்களில் இரண்டு ஹமாஸ் போராளிகள் கொல்லப்பட்டனர்.

காசாப் பிரதேசத்தின் எல்லைப் பகுதியில் இஸ்ரேலிய டாங்கி ஒன்று ஹமாஸ் போராளிகளால் குண்டுத் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இருதரப்பினருக்கு இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த மோதல்களில் தமது தரப்பில் நான்கு படைவீரர்கள் காயமடைந்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. ஆனால் இந்த தாக்குதலில் இஸ்ரேலியப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதாக செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இந்த மோதல்களை தாமே நடத்தியதாக உரிமை கோரியுள்ள ஹமாஸ் அமைப்பு தமது தரப்பில் இருவர் உயிரிழந்துள்ளதை ஒப்புக்கொண்டுள்ளது.

இஸ்ரேலியப் படைகள் காசாப் பிரதேசத்தில் உள்ள யூதக் குடியிருப்புளைச் சுற்றி ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே ஹமாஸ் போராளிகள் தாக்குதலை மேற்கொண்டதாக பி.பி.சி செய்தியாளர் அலன் ஜோன்சன் தெரிவித்தார்.

பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத் மரணமடைந்ததன் பின்னர் கடந்த சில வாரங்களாக காசாப் பிரதேசங்களில் மோதற் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் காசாப் பிரதேசத்தில் யுத்த நிறுத்தத்தினை மேற்கொள்வது தொடர்பாக ஹமாஸ் போராளிகள் கருத்துக்களை வெளியிட்டிருந்தபோதும் தற்போது இடம்பெற்றுவரும் மோதல்கள் பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான முரண்பாட்டை நீடித்துச் செல்லும் என்பதை எடுத்துக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.




## 60 தொன் வெடிமருந்துக் கிடங்கை

# தகர்க்கப் போவதாக படைவீரர் எச்சரிக்கை!

பிரான்ஸ் நாட்டு இராணுவத்தில் பணியாற்றிவரும் ஒருவர் வெடிகுண்டு நிபுணராக இருக்கிறார். இவர் விரைவில் ஓய்வுபெற இருக்கிறார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் பதவி நீடிப்பு தரக்கோரியும் வெடிமருந்துக் கிடங்கில் நுழைந்து கதவைப் பூட்டிக்கொண்டு கிடங்கைத் தகர்க்கப்போவதாக மிரட்டினார். அந்தக் கிடங்கில் 60 தொன் வெடி மருந்துகள் இருந்தன.

அவர் அப்படி எதுவும் செய்துவிட்டால் அந்தக் கிடங்கு இருக்கும் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு ஆபத்தாக முடியும் என்பதால் -

3 கிராமங்களில் உள்ள 400 பேரை அதிகாரிகள் அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர். அந்த வழியாகச் செல்லும் போக்குவரத்தையும் அதிகாரிகள் திருப்பிவிட்டனர்.

அந்த இடத்தைச் சுற்றி 50 தனிப் பொலிஸ் படையினரும், 100 தீயணைப்பு படைவீரர்களும் நிறுத்தப் பட்டுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டில் இராணுவ வீரர்களுக்கு அவர்கள் செய்யும் வேலைக்கு ஏற்ப ஓய்வுபெறும் வயது மாறுபடுகிறது.

அந்த இராணுவ வீரரின் குடும்பத்தினர்மூலம் அவருடன் தொடர்பு கொள்ள அதிகாரிகள் முயற்சித்து வருகிறார்கள்.

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## 2005 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம் வாகன, மிருக வரி உரிமம் பெறுவதற்கான

# விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் 2005 ஆம் ஆண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தை எதிர்வரும் 31.03.2005 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவும். கடந்த காலங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தாதவர்கள் இந்த ஆண்டிற்கான கட்டணத்துடன் பழைய நிலுவைகளையும் செலுத்துதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் உத்தரவுப் பத்திரம் பெறத் தவறியோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

கலாநிதி க.குணராசா
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(C-3446)

# இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளின் செயற்பாடுகள் சவுதியில் ஒழிக்கப்படும்!

## அந்த நாட்டு அரசு உறுதியளிப்பு

சவுதியிலுள்ள இஸ்லாமிய கிளர்ச்சி வாதிகளின் செயற்பாடுகள் அனைத்தும் நசுக்கப்படுமென அந்த நாட்டு அரசாங்கம் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

சவுதியின் ஜெட்டா நகரில் அமைந்துள்ள அமெரிக்கக் கவுன்சிலர் அலுவலகம் இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளால் தாக்கப்பட்டதன் பின்னரேயே சவுதி இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் அமெரிக்கரல்லாத ஐவரும் தாக்குதல் நடத்திய கிளர்ச்சிவாதிகள் நால்வருமென மொத்தம் ஒன்பதுபேர் கொல்லப்பட்டிருந்தனர். கொல்லப்பட்ட ஐவரில்நான்கு பேர் அமெரிக்க அலுவலகத்தில் நிர்வாக அலுவலர்களாக கடமை புரிந்தவர்களெனவும் மற்றையவர் தனியார் பாதுகாப்பு காவலர் எனவும் இவர்கள் அனைவரும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களெனவும் றியாத்திலுள்ள அமெரிக்க தூதரக பெண் பேச்சாளர் கரோல் கலின் தெரிவித்தார்.

அத்துடன் இந்த அலுவலகத்தில் பணிபுரிந்த அனைத்து அமெரிக்கப் பணியாளர்களும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த தாக்குதலை தாமே நடத்தியதாக அராபிய தீபகற்பத்திற்குப் பொறுப்பான அல்கொய்டா அமைப்பு உரிமை கோரியுள்ளது. அத்துடன் இந்த தாக்குதல் ஈராக்கின் பலூஜா நகரில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாகவே நடத்தப்பட்டதாகவும் அந்த அமைப்பு இணையத்தளம் மூலம் வெளியிட்ட செய்தியில் தெரிவித்திருந்தது.

இதனிடையே இந்த தாக்குதலை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வன்மையாக கண்டித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிகையில் ஈராக்கிலும் சவுதியிலும் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படையினரை வெளியேற்றுவதற்காகவே பயங்கரவாதிகள் இவ்வாறான தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், இவ்வாறான தாக்குதலை நடத்துவதன் மூலம் அவர்கள் அமெரிக்கர்களை கடும் போக்கானவர்களௌனக்காட்ட முயற்சி செய்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதல்கள் மூலம் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்கெதிராக அமெரிக்கா ஒருபோதும் அடிபணியமாட்டாது என அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் தெரிவித்தார்.



# 3 படையினர் உட்பட 56 பேர் கொலம்பியப் படையால் கைது!

போதைவஸ்து கடத்தல் வியாபாரம் தொடர்பாக மூன்று கொலம்பியப் படைவீரர்கள் உட்பட 56 வலது சாரி ஆயுதக் குழுவினர் கொலம்பிய அதிகாரிகளால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.


கொலம்பிய அரசாங்கத்திற்கும் வலது சாரித் தீவிரவாதிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகள் முக்கய கட்டத்தை அடைந்துள்ள நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதான வலதுசாரி ஆயுதக் குழுவினர் கடந்த 18 மாதங்களில் 100 ற்கும் மேற்பட்ட கொலைகளைப் புரிந்துள்ளதாக கொலம்பிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொலம்பியாவின் தென்பகுதியில் இருந்துவந்த போதைவஸ்து வியாபாரி ஒருவருக்கும் குறிப்பிட்ட ஆயுதக்குழுவினருக்கும் இடையில் கொக்கோயின் போதைப் பொருள் வியாபாரம் தொடர்பாக நீண்டநாள் உறவுகள் நிலவிவந்ததாக தெரிவித்துள்ள கொலம்பிய அதிகாரிகள் கைதுசெய்யப்பட்ட கொலம்பிய இராணுவத்தினருக்கும், வலது சாரிப் போராளிகளுக்கும் இடையில் சமாதான பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரே நீண்டகாலமாக போதைவஸ்து வியாபாரம் தொடர்பான தொடர்புகள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கொலம்பிய அரசாங்கம் கைது செய்த தமது உறுப்பினர்களை பிணையில் விடுதலை செய்யாவிட்டால் அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்துவதோடு மீண்டும் அரசாங்கத்துக்கு [illegible] தாக வலதுசாரி ஆயுதக்குழுத் தலைவா சல்வற்றோ மான்குசோ எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

# ஆத்ம சாந்தி கிரியை அழைப்பு



## திருமதி அன்னலட்சுமி மாணிக்கம் (செல்வநாயகம்)

*எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.12.2004 அன்று கீரிமலையிலும், வீட்டுக்கிரியைகள் 10.12.2004 வெள்ளிக்கிழமை நடைபெறும்.*

*எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு மதிய போசனத்திலும் பங்கேற்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

2 ஆம் ஒழுங்கை,
கைலாய பிள்ளையார் வீதி, சாவகச்சேரி.
தொ.பே: 0777 852077
0777617545

இங்ஙனம்
ம.குலேந்திரன் (மகன் - லண்டன்)
க.உமாமகேஸ்வரன (அழுது - மருமகன்)
சி.கந்தசாமி (மருமகன் - கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுனில் தாகுறு கொலை சந்தேகநபருக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டரை வருடம் கடந்த பின்னரும் தமிழ் இளைஞர் ஒருவருக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தெஹிவளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுனில் தாகுறு என்பவரை சுட்டுக்கொன்றதாகத் தெரிவித்து கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முள்ளியவளை குமாரபுரத்தைச் சேர்ந்த செல்லத்துரை கிருபாகரன் (வயது 27) என்பவர் கைதுசெய்யப்பட்டு கல்கிசை நீதிமன்றத்தின் பணிப்பின்பேரில் சாதாரண கொலைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சாதாரண கொலைக்குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஒரு வருடமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அவரை கட்டாயம் பிணையில் செல்ல அனுமதிக்கவேண்டும் எனக் கோரி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா பிணை மனு தாக்கல் செய்திருந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்தவரென்றும் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டவர் என்றும் இவர் மீது குற்றம்சாட்டப்பட்டு இவரது பிணை மனுவுக்கு எதிராக சட்டமா அதிபரால் ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விவாதம் கடந்த மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றவேளை கல்கிசை நீதிமன்ற நீதிபதி எஸ்.ஏ.எல்.ஆபுறு சந்தேக நபருக்கு எதிராக எந்த சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என கேள்வி எழுப்பினார்.

இதன்போது அரச சட்டத்தரணி எந்தக் காரணமும் தெரிவிக்காதது டன் இது தொடர்பாக பதிலளிப்பதற்கு கால அவகாசம் தருமாறும் கேட்டிருந்தார். இதனையடுத்து நீதிபதி கடந்த மாதம் 30 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

மீண்டும் குறித்த தினத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது அரச சட்டத்தரணி டி.பி.லியனகே சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் ஆஜராகி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கிருபாகரன் குற்றம்சாட்டப்பட்டு ஏற்கனவே மேல்நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து, சந்தேக நபரின் பிணைமனுவை நிராகரித்த நீதிபதி வழக்கை ஜனவரி மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்து வைத்தார்.

## ஈராக்கில் கடத்தப்பட்ட இலங்கையர் விடுதலை?

ஈராக் தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழரான தினேஸ் தர்மேந்திரா ராஜரத்னம் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

வத்தளையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான இவர் குவைத்திலுள்ள அமெரிக்க நிறுவனமொன்றில் சாரதியாகப் பணியாற்றி வந்த சமயம் தொழில் நிமித்தம் ஈராக்கிற்கு சென்றபோது பிடிக்கப்பட்டார்.

ஆனாலும், ஈராக்கிய தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் இவர் விடுவிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தபோதிலும், இதனை உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக குவைத்தில் இலங்கைத் தூதுவராகப் பதவியேற்கவுள்ள அகமட் இசட் தெரிவித்தார்.

## சுத்திகரிப்பு தொழிலாளர்கள் மாநகரசபை முன் மறியல்!

### 2 மணிநேரம் பணிகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர் நடத்திய மறியல் போராட்டத்தால், மாநகரசபையின் அனைத்துப் பணிகளும் நேற்று 2 மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தன.

சுத்திகரிப்பு தொழிலாளர்கள் குருநகர்ப் பகுதியில் தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவித்து, சில தினங்களாக பணி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது இவர்களுக்குப் பதிலாகப் புதிய சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டதை அடுத்து, இவர்கள் தமது போராட்டத்தை நேற்று விஸ்தரித்தனர். மாநகரசபைக்குள் எந்த ஊழியரையும் உட்செல்ல அனுமதிக்காது அலுவலகத்தின் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், யாழ்பொது நூல்நிலையம், ஆயுர்வேத நிலையம், யாழ். மாநகரசபை தலைமை அலுவலகம் என்பவற்றின் சுமார் இரண்டு மணிநேர பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சுத்திரிகரிப்புத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் யாழ். மாநகரசபை ஆணையாளர், யாழ். நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து காலை 10.30 மணியளவில் மாநகர சபையின் பணியாளர்களை மாநகரசபைக்குள் செல்ல இவர்கள் அனுமதித்தனர்.

இதனைத் தொடர்ந்து மாநகர சபையின் பணிகள் வழமைக்குத் திரும்பின.

## அரசியற்துறை அலுவலகம் மீது மீண்டும் கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியற்துறை அலுவலகம்மீது நேற்று அதிகாலை மீண்டும் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1.10 மணியளவில் 4 கைக்குண்டுகள் இனந்தெரியாத நபர்களினால் அலுவலகத்திற்கு வெளியேயுள்ள வீதியிலிருந்து வீசப்பட்டுள்ளது.

இந்தக் கைக்குண்டுகள் நான்கும் அலுவலக வளவிற்குள் விழுந்து வெடித்துச் சிதறியதையடுத்து கட்டடத்திற்கு சேதமேற்பட்டுள்ள போதிலும் பாரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை.

சம்பவத்தின்போது நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் உட்பட அரசியற் துறைப் போராளிகள் 5 பேர் அங்கு தங்கியிருந்தனர்.

கடந்த 21ஆம் திகதியும் இத்தகைய தாக்குதலொன்று இந்த அலுவலகம்மீது நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### புலிகளின்...

படையணித் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வுகளின் இறுதியில் போராளிகளின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

### நீதிமன்றை...

வாளியாகக் கருதுகின்றது' எனக் குறிப்பிட்டு, இரண்டு வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

இதனையடுத்து நேற்று நீதிமன்றத்திற்கு சமுகமளித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கா சிறைச்சாலை அதிகாரிகளினால் பொறுப்பேற்கப்பட்டு கைவிலங்கிடப்பட்ட நிலையில் வெளியே அழைத்துவரப்பட்டு சிறைச்சாலை வாகனத்தில் வெலிக்கடை சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை ஐந்து நீதிபதிகளும் ஏகமனதாகத் தீர்ப்பளித்திருப்பதாலும், உயர்நீதிமன்ற தீர்ப்பாக இது உள்ளதனாலும் எஸ்.பி.திஸநாயக்காவிற்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்யமுடியாதென பிரபல சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார்.

### கியூ...

1980களின் பிற்பகுதியில் புளொட் எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்ட பரந்தன் ராஜன் எனப்படும் ஞானசேகரம் பலஸ்தீனத்திலும் இந்திய படைகளிடமும் விசேட பயிற்சிகளைப் பெற்றவர்.

1986 களின் பிற்பகுதியில் புளொட்டில் இருந்து பிரிந்து சென்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் தற்போதைய அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பை ஸ்தாபித்தவர். பின்னர் இவர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக டக்ளஸ் தேவானந்தா தனியாக ஈ.பி.டி.பி. கட்சியை ஸ்தாபித்தார்.

1987 களில் இந்திய அமைதி காக்கும் படையினருடன் இணைநது வடக்கு - கிழக்கில் தொழிற்பட்ட பரந்தன் ராஜன் எனப்படும் ஞானசேகரத்தின் ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பு, வட-கிழக்கு மாகாணசபை ஆளும் தரப்புக் கட்சியாக தொழிற்பட்டிருந்தது.

பின்னர் அன்றைய காலப்பகுதியில் கட்டாய இராணுவ ஆட்சேர்ப்பில் ஈடுபட்ட இந்த அமைப்பினர் மாகாணசபை செயலிழந்து அமைதிப்படை வெளியேறியபோது அவர்களுடன் வெளியேறி இருந்தனர்.

கடந்த 18 வருடகாலமாக இந்தியாவைத் தளமாகக் கொண்டு இயங்கிய இவர், அங்கிருந்து அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இந்தத் தகவல் குறித்து தமிழக பாதுகாப்புத் தரப்போ அல்லது தமிழக அரசோ அல்லது ஈ.என்.டி.எல்.எவ்வோ எத்தகைய தகவல்களையும் வெளியிடவில்லை. (01)

## சவுதி அமெரிக்க தூதரக தாக்குதலில் கண்டியை சேர்ந்த முஸ்லிம் இளைஞர் பலி!

சவுதி அரேபியா - ஜெட்டாவிலுள்ள அமெரிக்க கவுன்சிலர் அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலில் இலங்கை முஸ்லிம் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் கண்டியைச் சேர்ந்த மொகமட் ஜவ்பர் சாதிக் (வயது 23) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதே சம்பவத்தில் பேருவளையைச் சேர்ந்த அப்துல் ஜவ்பர் மொகமட் நிருஸ் என்பவர் காயமடைந்துள்ளார். சவுதிக்கான இலங்கைத்தூதுவர் இப்ராகிம் சாகித் அன்சார் இந்தத் தகவல்களை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜவ்பர் சவுதியிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர் சேவைக் கம்பனி ஒன்றில் ஒப்பந்த அடிப்படையில் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்தார்.

ஜவ்பருடைய நண்பர் ஒருவரை அரபு செய்திச் சேவை செவ்விகாண்கையில் அவர் கூறியதாவது-

நான் சம்பவம் இடம்பெற்ற காலையும் ஜவ்பரைச் சந்தித்து விட்டு வந்தேன். இலங்கையில் சுகவீனமுற்றுள்ள தனது தந்தையை இந்தியாவுக்கு கூட்டிச்சென்று வைத்தியம் பார்ப்பதற்காக தான் இரண்டு வாரங்களில் இலங்கைக்குச் செல்லப்போவதாகவும் அ[illegible]காகத் தான் கடந்த வாரம் விடுமுறைக்கு விண்ணப்பித்ததாகவும் ஜவ்பர் கூறினார் எனத் தெரிவித்தார்.

### சமாதான முயற்சிகள்...

இந்த உரை வெளியாகி பத்து நாட்களுக்கு மேலாகியும் அரச தரப்பிடம் இருந்து புலிகளுக்கு எந்தப் பதிலும் அனுப்பப்படவில்லை.

தகவல் திணைக்களம் மூலம் அரசு வெளியிட்ட அறிக்கையொன்றில் புலிகளின் கோரிக்கை நிபந்தனைவிதிப்பது போல இருப்பதாகவும் இதை ஏற்கமுடியாதென்றும் கூறியிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க -

அரசாங்கம் போருக்குத் தயாராக இருப்பதாகவும் - புலிகள் கோருவதுபோல இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் மட்டும் பேச்சு நடத்த முடியாதென்றும் தெரிவித்தார்.

அத்துடன், பாதுகாப்புக்காக கடந்த வருடத்தைவிட 8 வீதம் அதிகமாக 5630 கோடி ரூபாவை அடுத்த ஆண்டில் பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கவும் நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

புலிகளின் அழைப்பை நிராகரித்து அரசாங்கம் படைகளைப் போருக்குத் தயார்படுத்துவதில் அதிக நாட்டம் காட்டி வருவதால், மீண்டும் யுத்தம் ஏற்படக்கூடிய அபாய நிலை ஏற்பட்டிருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெ[illegible]யிட்டுள்ளன.

## மரண அறிவித்தல்



### திரு. அப்பாச்சி குணரட்ணம்

[ஓய்வு பெற்ற கொமர்ஷல் வங்கி ஊழியர், யாழ்ப்பாணம்]

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், மடத்தடி கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாச்சி குணரட்ணம் நேற்று **07-12-2004** அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற அப்பாச்சி - மீனாட்சி அவர்களின் அன்புப் புத்திரனும், நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி குணசேகரத்தினம், நாகராசா, அமரர் சரஸ்வதி, பரமேஸ்வரி, ஜெயலக்சுமி, மகேஸ்வரி, ஈஸ்வரி, பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரன், முரளீஸ்வரன் (பிரான்ஸ்), சுரேஸ்வரன் (கொமர்ஷல் வங்கி - நெல்லியடி), கமலேஸ்வரன் (இத்தாலி), ரங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிறிகௌரி, கலாதேவி (பி.மா.சுகாதார சேவைகள் பணிமனை - யாழ்), கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் (08-12-2004) இன்று காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சங்கபுலம் மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.சுரேஸ்வரன் (மகன்)

(C/3442)

பெண்களுடைய உரிமைகளையும், சிறுவர்களினுடைய உரிமைகள் பாதுகாப்பையும் மனித உரிமைகள் நிறுவனம் முதன்மைப் பணியாகக் கொண்டுள்ளது.

UNIT

உலக முன்னணி நிறுவனங்களின் பொருட்களுடன் தரம் மற்றும் தொழில நுட்ப தொலைநோக்குடன் சகலருக்கும் சலுகைகள் என்ற அடிப்படையில் COMPAQ, DELL, IBM INTEL, PERX மற்றும் ASROCK நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்தி தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் உலகத்தரம் வாய்ந்த கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொழும்பு விலைக்கே யாழில் கிடைக்கச் செய்து வழங்குகின்றோம்.

3 வருட முழு உத்தரவாதம்

விசேட சலுகைப் பொதிகள்

அதிசயிக்கத்தக்க கொழும்பு விலையில்

புதிய Multimedia Pentium IV கணனிகள 39,500/= முதல்

மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

இந்திய தொழில்நுட்ப பொறியியலாளர்களின் நேரடி கண்காணிப்பில் சகல கணனி இலத்திரனியல் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும்

கல்வி நிலையங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் முகவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.

இன்ற இச்சலுகை கடைசி

அதிசயிக்கத்தக்க சலுகைகள்

நிபந்தனைக்குட்பட்டது.

Dialog package/Computer Table Totally Free

PROUDED INDIAN CENTER

Special SATA featured High speed computer

சகல கணனி உதிரிப்பாகங்களும் அதிசயிக்கத்தக்க சலுகை விலையில்

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த சாதாரண தரம் மாதிரிப் பரீட்சை - 2004


சி. ஸ்ரனிஸ்லாஸ்
சென்பற்றிக்ஸ் கல்லூரி

## வரலாறும் சமூகக்கல்வியும்

பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

பின்வரும் தேசப்படத்தைப் பயன்படுத்தி 1-10 வினாக்களுக்கு விடை எழுதுக.



1) A -- B, C -- D என்பன குறிப்பன.
1. பாக்குத்தொடுகடல், மலாக்காத் தொடுகடல்
2. பாக்குத்தொடுகடல், குக்தொடுகடல்
3. பாக்குத்தொடுகடல், கினியா விரிகுடா
4. மலாக்காத்தொடுகடல், பாக்குத்தொடுகடல்

2) பாரசீகக் குடாவைக் குறிக்கும் இலக்கம் எது?
1. 1  2. 2  3. 3  4. 4

3) H என்ற எழுத்தால் குறிப்பிடப்படுவது
1. விக்டோரியா ஏரி 2. அயர் ஏரி 3. பெயிக்கால் ஏரி 4. சிலேவ் ஏரி

4) அ, ஆ, இ என்பன குறிக்கும் நதிகள் முறையே
1. குவாங்கோ, அமூர், சிந்து 3. குவாங்கோ, சிந்து, அமூர்
2. சிந்து, அமூர், குவாங்கோ 4. சிந்து, குவாஙகோ, அமூர்

5) சுலைமான் மலை, ரியான் சான் மலை, கிங்கான்மலை என்பவற்றைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் முறையே
1. EGF . 2. EFG 3. GFE 4. FGE

6) படத்தில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசம் எது?
1. தீபெத் மேட்டுநிலம் 3. தார் பாலைவனம்
2. யூனான் மேட்டுநிலம் 4. டவுன்ஸ் புல்வெளி

7) 2 ஆம் உலகப் போரின்போது அணுகுண்டு வீசப்பட்ட கிரோசிமா, நாகசாகி ஆகிய இரு நகரங்களைக் குறிக்கும் எழுத்துக்களாவன.
1. O,N 2. M,L 3. N,O 4. M,N

8) மாலைதீவுகள், அந்தமான் தீவுகள், இலட்ச தீவுகள் என்பவற்றைக் குறிக்கும் இலக்கங்கள் முறையே
1. 1,2,3, 2. 2,3,1 3. 3,1,2 4. 3,2,1

9) அரபிக்கடலையும், தாய்வானையும் குறிக்கும் எழுத்துக்கள் முறையே
1. A,B 2. Z,C 3. Z,B 4. A,P

10) தென்னாசியாவில் மிகவும் பிரசித்தமான ஒரு நகரை T என்பது குறிக்கிறது. அந்நகரத்தின் பெயர் எது.
1. தாய்வான் 2. ரங்கூன் 3. கொங்கொங் 4. சிங்கப்பூர்

11) பாராளுமன்றக் கருமங்களின் ஒழுங்கமைப்பு, அவற்றை நடைமுறைப்படுத்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பானவர்.
1. சபாநாயகர் 2. சபைமுதல்வர் 3. செயலாளர் நாயகம் 4. பிரதம மந்திரி

12) பின்வருவனவற்றுள் இலங்கையின் ஈரவைப்பாராளுமன்ற முறையை இல்லா தொழித்த சீர் திருத்தம் எதுவாகும்.
1. 1931 டொனமூர் சீர்திருத்தம் 3. 1972 முதலாம் குடியரசு யாப்பு
2. 1974 சோல்பரித்திட்டம் 4. 1978 சனநாயக சோசலிசக் குடியரசு யாப்பு

13) மலையகப் பகுதியில் 1815 இல் ஆரம்பித்த பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக மக்கள் அதிருப்தி காண்டமைக்குக் காரணமாக அமைந்தது பின்வருவனவற்றுள் எது
1. கண்டி மக்களின் பாரம்பரியங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் பிரித்தானியர் மதிப்பளிக்காமை.
2. சிறி விக்கிரம ராசசிங்கனை நாடுகடத்தியமை.
3. நாயக்கர், பிரதானிகளின் அதிகாரங்களை நீக்கியமை.
4. புதிய வரிவகைகளை நடைமுறைப்படுத்தியமை.

14) உலக சனத்தொகைக்கு போதுமான உணவு உற்பத்தியானபோதும், பூமியில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் போதுமான அளவு உணவு கிடைப்பது இல்லை எனக்கூறப்படுவதற்கான பிரதான காரணமாக அமைவது.
1. உற்பத்தியாகும் உணவில் பல்வகை இன்மை.
2. களஞ்சியப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளினால் உணவு பெருமளவு வீணாகுதல்.
3. உற்பத்தியாகும் உணவு ஒழுங்குமுறையில் பகிர்வு செய்யப்படாமை.
4. சில அபிவிருத்தியடைந்த நாடுகள் அவற்றுக்கு உணவைப் பெருமளவு நுகர்வு செய்தல்.

15) மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம்.
1. அவை புரட்சிகள் மூலம் பெறப்பட்டவை என்பதாகும்.
2. அவற்றை மீறினால் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்பதாகும்.
3. அவை தனி ஆளினதும், சமுதாயத்தினதும் நல்வாழ்வுக்கு வழிவகுக்கின்றன என்பதாகும்
4. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றுக்கு விசேட கவனம் செலுத்து கின்றயையாகும்.

16. சனநாயக ஆட்சி முறையுள்ள நாடொன்றில் எதிர்க்கட்சி ஒன்று மேற் கொள்ளவேண்டிய பிரதான செயற்பாடு எதுவாகும்?
1. அரசாங்கத்துக்கு எதிரான கொள்கைகளை மக்களிடம் வளர்க்க வேண்டும்.
2. சகல அரசாங்க நடவடிக்கைகள் மீதும் எதிரான கருத்துக்களை வெளியிட வேணடும்
3. தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
4. அரசாங்கம் மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளிலும் பிழைகளை எடுத்துக் காட்டுவதற்கு முன்னின்று உழைக்கவேண்டும்.

17) தென்கிழக்காசியாவில் அமைந்துள்ள சர்வதேச ஆராய்ச்சி நிலையம் எதுவாகும்.
1. நெல் ஆராய்ச்சி நிலையம் 3. பயிர் ஆராய்ச்சி நிலையம்
2. மிருகவள ஆராய்ச்சி நிலையம் 4. நிலவள ஆராய்ச்சி நிலையம்.

18) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இறப்பு வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்ட மைக்கான பிரதான காரணம் எதுவாகும்.
1. வைத்தியத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி
2. எழுத்தறிவில் ஏற்பட்ட வளர்ச்சி
3. பெண்களின் சமூக அந்தஸ்தில் ஏற்பட்ட வளர்ச்சி
4. பொருளாதார வளர்ச்சி

19) கண்டி இராசதானியில் சித்திர, சிற்பக் கலைகளின்போது பெருமளவுக்கு கையாளப்பட்ட கலை வடிவங்களை உள்ளடக்கிய விடையினைத் தெரிக.
1. அன்னப்பறவையின் பிணைப்பு, மலர்க்கன்னி, அன்னாசிமலர், கலசம்
2. மரச்செதுக்கல் கலை, சிற்பக்கலை, தையற்கலை, செதுக்கல் கலை
3. மரச்செதுக்கல் கலை, மலர்க்கன்னி, அன்னாசிமலர், கலசம்.
4. அன்னப்பறவையின் பிணைப்பு, கலசம், சிற்பக்கலை, நூல் நூற்றல் கலை.

20) சோல்பரி யாப்பு முறைச் சீர்திருத்தங்களினால் புகுத்தப்பட்ட மாற்றம் பின்வருவனவற்றுள் யாது?
1. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
2. பாராளுமன்ற அரசாங்கமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை
3. நிர்வாகக்குழு முறைமை புகுத்தப்பட்டமை
4. பிரதேச வாரிப்பிரதிநிதித்துவமுறை புகுத்தப்பட்டமை.

21) வெளிநாட்டவரான போர்த்துக்கேயர் கோட்டை இராட்சியத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு உதவிய பயனுறுதி வாய்ந்த காரணி.
1. இலங்கையானது பல இராச்சியங்களாக பிரிக்கப்பட்டிருந்தமை காரணமாக நிலவிய ஒற்றுமையின்மை.
2. படைகளை வழிநடத்திச் செல்வதில் இளவரசர் பலவீனராக இருந்தமை.
3. காலத்திற்கு ஒவ்வாத படைக்கலங்களை இந்நாட்டு மக்கள் வைத்திருந்தமை.
4. கிறிஸ்தவர்களாவதில் மக்கள் காட்டிய ஆர்வம்.

22) தற்போதைய இலங்கை அரசியல் யாப்புக்கு இணங்க அமைச்சரவை சம் பந்தமான பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது.
1. சனாதிபதியே அமைச்சரவையின் தலைவர் ஆவார்.
2. எல்லா அமைச்சர்களும் அமைச்சரவையில் இடம்பெறுவர்.
3. மாகாண முதலமைச்சர்கள் யாவரும் அமைச்சரவையில் இடம்பெறுவர்.
4. அமைச்சரவைக்கு அமைச்சர்களை நியமிப்பது பிரதம அமைச்சரேயாவார்.

23) பின்வருவனவற்றில் பெருமளவுக்கு சூழலை மாசடையச் செய்யாத சக் திப்பொருட் தொகுதி யாது?
1. சூரியசக்தியும், நீர் மின்சாரமும் 2. நீர் மின்சாரமும், கனிய எண்ணெயும்
3. அணுசக்தியும், இயற்கை வாயுவும். 4. நிலக்கரியும் கனி எண்ணெயும்

24) ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் கிடைக்கும் நிலம் குறைந்துசெல்லும்போது எடுக்க வேண்டிய புத்திசாலித்தனமான நடவடிக்கைகளின் பொருத்தமற்றது யாது?
1. ஏற்கனவே பயிர்செய்யப்படும் நிலத்திலிருந்து அதிக விளைச்சலைப் பெறுதல்.
2. புதிய நிலங்களைப் பயிர் செய்கைக்கு கொண்டு வருதல்.
3. அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகளை பயன்படுத்துதல்.
4. சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்.

25) சட்டத்துக்குமாறாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை, நீதிமன்றத்துக்கு கொண்டு வரும்படி கோருவதற்கு பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தலாம்.
1. தற்காலிகக் கட்டளை 2. ஜனாதிபதியின் விதிப்பு
3. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை 4. ஆட்கொணர்வுச் சட்டம்

26) பின்வருவனவற்றுள் ஜனநாயக ரீதியான தொழிற்பாடாக எதனைக் குறிப்பிடலாம்
1. ஒருவர் தனது எதிரிகளைக் கடுமையாகக் கண்டனம் செய்வது.
2. ஆக்கபூர்வமான கண்டனமும், எதிர்மாறான கருத்துக்களை சகிக்கும் தன்மையும்
3. ஒருவர் தனது அபிப்பிராயங்களை பொதுமக்களிடையே பகிரப்படுத்துவது.
4. தமது எதிரிகள் கருத்துக்களை வெளிப்படுத்தும் மார்க்கங்களை தடை செய்வது

27. பின்வரும் கூற்றுக்களில் நிலைக்கக்கூடிய அபிவிருத்தி என்ற எண்ணக் கரு வினை விளக்குவது யாது.
1. மக்கள் தேவையை கவனத்திற்கு எடுத்து, அதிக அளவில் உற்பத்தி செய்தல்
2. மனித உழைப்புக்கு முக்கியத்துவம், இயந்திர சாதனங்களை மிகக் குறைந்த அளவில் பயன்படுத்துதல்.
3. சூழலையும், எதிர்காலத்தையும் கவனத்திற்கு எடுத்து நாட்டின் வளங்களை கவனமாகப் பயன்படுத்தல்.
4. அபிவிருத்தியடைந்த நாடுகள்போல் தொழில் நுட்பங்களையும், தொழில் நுணுக் கங்களையும் பயன்படுத்தல்.

28) பின்வரும் எச்சந்தர்ப்பங்களில் இலங்கை மக்கள் எல்லோரும் ஒரு தேர்தல் தொகுதியின் வாக்காளராகச் செயற்படுபவர் என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.
A. நாடாளுமன்றத் தேர்தலின்போது B. மாகாணசபைத் தேர்தலின்போது
C. ஜனாதிபதித் தேர்தலின்போது D. குடியொப்பத்தை மேற்கொள்ளும்போது
1. AB 2. BC 3. CD 4. DA

29) பிரித்தானியர் ஆட்சியில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைப் பரம்பலின் விளை வாக மலைநாட்டு மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் முக்கியமானதை பின் வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
1. தன்னிறைவுடைய பொருளாதாரம் அழிந்தமை
2. காணிப்பற்றாக்குறை உக்கிரமடைந்தமை.
3. பெருந்தோட்டப் பயிர்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டமையால் மண்ணரிப்பு அபாயம் ஏற்பட்டமை.
4. வெளிநாட்டவரின் பெருந்தோட்டங்களில் தொழிலாளர் குறைந்த கூலியில் வேலை செய்யும் நிலைமை ஏற்பட்டமை.

30. பின்வரும் எச்சந்தர்ப்பங்களில் இலங்கை மக்கள் பட்டியல் முறையின்கீழ் வாக்களிப்பர் என்பதைக்குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

A. நாடாளுமன்றத் தேர்தலின்போது B. மாகாணசபைத் தேர்தலின்போது
C. சனாதிபதித் தேர்தலின்போது D. குடியொப்பத்தை மேற்கொள்ளும்போது
1. AB 2. BC 3. CD 4. DA

31) கீழ்வரும் விடயங்களில் ஜனநாயக ஆட்சிமுறை ஒன்றிற்கு அத்தியா வசியமான இலட்சணம் எது?
1. நிறைவேற்று அதிகாரத்துடனான சனாதிபதி ஒருவர் இருத்தல்
2. மந்திரிசபையின் கூட்டுப்பொறுப்பு நிலவுதல்.
3. அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருத்தல்.
4. அபிப்பிராயத்தை வெளிப்படுத்தக்கூடிய தேர்தல் முறையிருத்தல்.

32) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பாக தொழில்நுட்பவியலை பயன்படுத்தும்போது சிறந்த பயனளிக்கக்கூடியது பின்வருவன வற்றுள் எது?
1. உற்பத்திச் செலவை முடியுமானவரை குறைப்பதற்கு மனித உழைப்பைக் குறை வாகக் கொண்ட தொழில்நுட்பவியல் முறைகளைப் பயன்படுத்துதல்.
2. அந்தந்த நாடுகளில் முற்காலந்தொட்டு நடைமுறையில் உள்ள தொழில் நுட்பவியல் முறைகளை விருத்திசெய்ய பயன்படுத்துதல்.
3. தொழிநுட்பவியல் முறைகளை அந்தந்த நாடுகளின் பொருளாதார சமூக நிலை மைகளுக்கு பொருந்தும் வகையில் மாற்றியமைத்துப் பயன்படுத்துதல்.
4. உச்ச அளவு இலாபத்தைப்பெற நவீன தொழிநுட்பவியல் முறைகளை உற்பத்திச் செயற்பாடுகளில் பயன்படுத்துதல்.

**தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தைப் பயன்படுத்தி பின்வரும் 33 - - 37 வினாக்களுக்கு விடை எழுதுக.**




33) மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட பெரிய நீர்த்தேக்கமான ரந்தனிகலையை குறித்துக்காட்டும் எழுத்து.
1. A 2. B
3. C 4. D

34) இலங்கையின் தலைநகரங்களாக விளங்கிய இடங்கள் இப்படத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இலங்கையின் தலைநகரமாக மிக நீண்ட காலம் விளங்கிய நகரத்தைக் குறிக்கும் எழுத்து.
1. L 2. M 3. N 4. P

35) H என்ற எழுத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசம் காட்டுவது.
1. முத்துக்கள் காணப்படும் மன்னார் குடாவிற்கு அண்மையிலுள்ள பகுதி
2. மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் பேதுரு கண்டமேடை
3. தற்போது இந்தியாவுக்கு சொந்தமான வோர்ஜ் கண்டமேடை.
4. சங்குகள் அதிகமாக கிடைக்கும் பாக்கு நீரிணை.

36) கரையோர மண்ணரிப்பு பெரும் பிரச்சினையாகியுள்ள பிரதேசத்தை குறித்து நிற்கும் எழுத்து எது.
1. அ 2. ஆ 3. இ 4. ஈ

37) தென்மேற்குப் பகுதியில் வரிக்கோடுகளால் காட்டப்பட்ட பகுதி
1. கொழும்பு கொமாண்டார் பிரிவு 3. றைகம பிரிவு
2. சீதாவாக்கை பிரிவு 4. கோட்டை பிரிவு

**38 - 40 வரையிலான வினாக்களுக்கு அட்டவணையை அடிப் படையாகக் கொண்டு விடை தருக.**

| நாடு | தலாவருமானம் | பௌ.வா.ப. சுட்டெண் | ஆயுள் எதிர்பார்ப்பு | சிசுமரணம் (1000க்கு) | எழுத்தறிவு |
|---|---|---|---|---|---|
| A | 9890 | 96 | 76 | 8 | 99 |
| B | 13360 | 30 | 56 | 15 | 15 |
| C | 480 | 82 | 66 | 8 | 82 |
| D | 380 | 29 | 40 | 26 | 20 |

38. மேற்கூறப்பட்ட தகவல்களின்படி அபிவிருத்தியடைந்த நாடென எதைக்கூறலாம்.
1. A 2. B 3. C 4. D


39. கல்வியில் பின்தங்கியுள்ள நாடு எது?
1. A 2. B 3. C 4. D

40. வறிய நாடாக இருப்பினும் மருத்துவ, சுகாதார வசதிகளைக் கொண்ட நாடென எதனைக் கூறலாம்.
1. A 2. B 3. C 4. D

## பகுதி II

**01.**

அ. 1: 50000 என்ற அளவுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இப்பிரதேசத்தின் தேசப்பட பகுதியினை பரிசீலித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.



தேசப்படத்தில் 1, 2, 3, 4, 5 எனக்காட்டப்பட்டுள்ள இடங்களில் உள்ள தரைத்தோற்ற அம்சங்கள் எவை என தெரிவு செய்க.
அ. கண்டல் நிலம் / கழிமுகம் / கரையோர நிலம்
ஆ. வட்டக்குன்று / கூம்புக்குன்று / சிறு குன்று
இ. மணற்றிடர் / பாதுகாக்கப்பட்ட வனம் / முனை
ஈ. சிறுகுன்று / ஆற்றிடைத்தீவு / தனிக்குன்று
உ. நேர்கோட்டுக்குடியிருப்பு/ அமைக்கப்படும் பிரதானவீதி/ பிரதான கட்டடங்கள்

II. அ. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள கணவாய்களின் எண்ணிக்கை யாது?
ஆ. இப்பிரதேசத்தில் உள்ள எல்லைகள் இரண்டின் பெயர்களை குறிப்பிடுக.
இ. வடகிழக்கு மூலையிலுள்ள பரந்த பௌதீக அம்சத்தின் பெயர் யாது?
ஈ. இங்கு காணப்படும் ஆற்றுக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர் யாது? (G பிரதேசம்)

02. A, B என்பவற்றின் மூலம் சுட்டிக்காட்டப்படும் பௌதீக அம்சங்களின் பெயர்களை முறையாக எழுதுக.

III. அ. இப்பிரதேசம் வெளிநாட்டவர்களை கவருவதற்கான காரணங்கள் இரண்டு எழுதுக.
ஆ. இப்பிரதேசத்தில் உள்ள சந்திக் குடியிருப்பில் வாழ்க்கை நடத்தும் மக்கள் பற்றி இரண்டு விடயங்களை எழுதுக.
இ. கரையோர பிரதேச மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குரிய ஏற பாடுகள் இரண்டினை கூறுக.
ஈ. கட்டம் இடப்பட்டுள்ள பிரதேசம் எத்தகைய பிரதேசம் என ஊகிக்கலாம். அதற்கான காரணம் ஒன்று தருக.

**பொருத்தமான விடையை எழுதுக.**

01) ஒல்லாந்தரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு ஆங்கிலேயரின் உதவியை நாடிய மன்னன் ................................................................

02) கண்டி உடன்படிக்கையின் (1815) தொடர்புபட்ட ஆளுநர் ..............................

03) பிரித்தானியர் கிழக்கிந்திய கம்பனியின் ஆட்சிக்காலம் ..............................

04) இலங்கையின் முதலாவது ஆங்கிலேய ஆளுநர் ..............................

05) 1833 இன் சட்ட சபையின் உறுப்பமைவு ..............................

06) இலங்கையில் வெளியான முதலாவது சிங்களப்பத்திரிகை ..............................

07) 1818 இல கைப்பற்றிபொல தலைமை தாங்கிய கிளர்ச்சியின் பெயர் ..............

08) இராசகாரிய முறையை மீண்டும் அறிமுகப்படுத்திய ஆங்கிலேயன் ..............

09) கண்டி இராட்சியத்தின் இறுதி மன்னன் ..............................

10) இரட்டை ஆட்சி முறையின்கீழ் செயலாற்றிய பிரித்தானிய ஆளுநர் ..............

11) பௌத்த சமய வளர்ச்சிக்காக உழைத்த ஐக்கிய அமெரிக்க நாட்டவர் ................................................................

12) கியூ கடிதத்துடன் தொடர்புடைய இளவரசன் ..............................

**விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**02.**

I. கீழ் தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய தனியாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
A- போர்த்துக்கேயர் இந்நாட்டிற்கு வந்தபோது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்தவர்
B - முல்லேரியாப் போரில் போர்த்துக்கேயரை தோல்வியடையச் செய்த சீதாவாக்கை இராச்சியத்தை ஆட்சி செய்தவர்.
C - கண்டியரசர் இவருக்கு மனைவியாகி அவர்களுக்கு அரச உரிமையை பெற்றுக்கொடுத்த இளவரசி.

II. 1818 ஆம் ஆண்டு சுதந்திர போராட்டத்திற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
III. இலங்கையின் கரையோரப்பகுதிகளிலிருந்து ஒல்லாந்தர் பொருளாதார நன்மைகளை எவ்வாறு பெற்றுக்கொண்டனர் என்பதை இரண்டு உதார ணங்களுடன் விளக்குக.

III. பிரித்தானியரால் இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பெருந்தோட்ட பயிர்ச்செய்கை காரணமாக இலங்கையின் மக்கள் சமூகத்திடையே ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை விளக்குக.

**03.** ஜப்பான், சுவீடன், இந்தியா, ஆப்கானிஸ்தான், சவுதிஅரேபியா, ஈரான், இத்தாலி, பிரான்ஸ்.

I. மேலே கூறப்பட்ட நாடுகளில் அபிவிருத்தியடைந்த ஐரோப்பிய நாடுகள் மூன்றை தெரிவு செய்க.

II. அபவிருத்தியடைந்துவரும், நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் பொதுவான இயல்புகள் நான்கினை குறிப்பிடுக.

III. செல்வந்த நாடுகள் என இனங்காணப்பட்ட நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகள் பட்டியலில் சேர்க்கப்படாமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக.
IV. அபிவிருத்தி செயன்முறைகளில் அரசியல் அமைதியின்மை எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை இரு காரணிகளை உதாரணமாக கொண்டு விளக்குக.

**04.**

I. பின்வரும் வளங்களிடையே பயன்படுத்தும்போது குறைந்து முடிவடையும் மூன்று வளங்களை தெரிவு செய்து எழுதுக. (கனிய நெய், தங்கம், சூரியசக்தி, நிலக்கரி, நீர், இயற்கை வாயு)
II. இலங்கையில் நீர்மின்சக்தி உற்பத்தியை வரையறுக்கும் இரண்டு காரணிகளை குறிப்பிடுக.

III. இலங்கை போன்ற நாடுகளில் மாற்றுச் சக்தி வலுக்களாக சூரிய ஒளி, காற்று என்பவற்றை பயன்படுத்துவதால் பெறக்கூடிய இரண்டு அனுகூலங்களை விபரிக்குக.

ஐஏ. இலங்கையைச் சுற்றியுள்ள கடற்கரையில் கனியநெய் படிவுகள் இருப்பதாக நம்பப்படுகிறது. எவ்வாறாயினும் இவ்வளத்தை பயன்படுத்தமுடியுமானால் அதனால் இலங்கையின் அபிவிருத்தியில் ஏற்படத்தக்க இரண்டு செல்வாக்குகளை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org